இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka under No. QD/202/News/2018 **Founded 19 Feb.1876**

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 22 திகதி: 25.11.2018 விலை : 20.00

## யாழ். மறைமாவட்டத்தில் - 2019 அழைத்தல் ஆண்டு பொதுநிலையினரின் அழைத்தல் பணிக்கு முக்கியத்துவம்

வருகிற 2019 ஆம் ஆண்டை எமது யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் அழைத்தல் ஆண்டாக அனுசரிப்பதென அண்மையில் ஆயர் பேரருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற குருக்கள் மன்றக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ் அழைத்தல் ஆண்டின் நோக்கம் திரு அவையின் பணிகளுக்கு தம்மைக் குருக்களாக, துறவிகளாக அர்ப்பணிப்பதை ஊக்குவிப்பதோடு, சிறப்பாக எமது மறைமாவட்டப் பொதுநிலையினர் எவ்வாறு தமது அழைப்பை இனங்கண்டு பல்வேறு வழிகளில் திரு அவையின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணிக்க முடியும் என்பதை ஊக்குவிப்பது மாகும்.

இவ்வகையில் இவ் அழைத்தல் ஆண்டில் பொதுநிலையினரின் அழைத்தல் வாழ்வு முன்னுரிமைப் படுத்தப்படுகின்றது.

பொதுவாக, எமது மறை மாவட்டத்தில் பெரும்பாலான பொதுநிலையினர் திரு அவையில் வெறுமனே பார்வையாளர்கள்போல திரு அவையின் செயற்பாடுகளுக்கோ, வளர்ச்சிக்கோ எவ்வகையிலும் பங்களிப்புச் செய்யாதவர்களாகவோ அல்லது மிகக்குறைந்த அளவு பங்களிப்புச் செய்பவர்களாகவோ வாழும் ஒரு நிலை அவதானிக்கப்படுகின்றது. இந்நிலை மாறி பொதுநிலையினர் எவ்வாறு தமது ஆற்றலுக்கும், வசதிக்கும் ஏற்ப பொறிலையினருக்கே உரித்தான பல்வேறு அழைத்தல்களைப் பெற்று திரு அவைக்கு தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்ய தம்மை அர்ப்பணிக்கும் ஆண்டாக இவ் அழைத்தல் ஆண்டு முன்னெடுக்கப்படும்.

எமது மறைமாவட்டத்தில் இயங்கும் பல்வேறு ஆணைக்குழுக்கள், பக்திச்சபைகள், நிறுவனங்கள் போன்றவை இவ் அழைத்தல் ஆண்டில் பொது நிலையினரை வழிநடாத்த ஆவன செய்யும் வகையில் தமது ஆண்டுத் திட்டங்களை வரைந்து செயற்படவுள்ளன. இதேவேளை குருக்களாக, துறவியாராக தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்கும் அழைத்தலும் இவ் அழைத்தல் ஆண்டில்மேலும் ஊக்குவிக்கப்படும்.

## ஆயர்த்துவப் பணியில் மூன்றாண்டுகள்...



இறைவனின் தாயாம்
மரியன்னை வழி நின்று
இறையாட்சி அறிவிக்கும்
யாழ் திருமறையின்
காவலனே!
மூன்றாண்டு முத்தான
முப்பணிகள்
சலிக்காது இளைக்காது
நிறைவேற்றி
நம்பிக்கை நிறைந்த ஊழியனாய்
வலம் வந்து உள்ளமதில் நிறைந்திட்டீர்
நல்லாயன் இயேசுவின் ஆட்சியினை
மந்தைகள் மகிழ்வோடு பெற்றிடவும்
ஆன்மீக உடல் நலமும் பெற்று நீர்
நீடுழி வாழ்ந்து வலம் வரவும்
மனம் நிறைந்த மகிழ்வோடு
வாழ்த்துகின்றோம்...

## இறை அழைத்தல் ஊக்குவிக்கப்படவேண்டும்

### புனித மடுத்தீனார் திருவிழாவில் யாழ் ஆயர்



யாழ்.மறைமாவட்ட வரலாற்றில் 150 ஆவது ஆண்டில் தடம்பதிக்கும் புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் புனித மடுத்தீனார் திருவிழா கடந்த 11.11.2018 ஞாயிற்று கிழமை குருமட அதிபர் அருட்பணி. S.J.C.பாஸ்கரன் அடிகளார் தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

திருவிழாத் திருப்பலி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானபிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியில் மறையுரையாற்றிய யாழ் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புனித மடுத்தீனார் குருமட கொடியேற்றல் நிகழ்வும் குருமடத்தின் யூபிலி ஆண்டை ஆரம்பிக்கும் நினைவு சின்ன திரை நீக்கமும் இடம்பெற்றன. மாலை விளையாட்டு நிகழ்வுகள் குருமட மைதானத்தில் நடைபெற்றன.

150 ஆண்டுகளை நோக்கி வரலாற்று தடம்பதிக்கும் யாழ்ப்பாணம் புனித மடுத்தீனார் சிறிய குருமடம் யாழ் மறைமாவட்டத்தில் கடந்த 149 ஆண்டுகளாக மறை மாவட்டக் குருக்களை உருவாக்கும் ஆரம்ப குருத்துவ உருவாக்கலின் தொட்டிலாகத் திகழ்ந்து வருகின்றது.

புனித மடுத்தீனார் சிறிய குருமடம் 2019 ஆம் ஆண்டு தன் 150 ஆவது ஆண்டு (1869 - 2019) நிறைவை எதிர் நோக்கியுள்ளது.

## புனித மடுத்தீனார் சிறிய குருமடம் காலத்திற்கு ஏற்ற பணிகளை வழங்க இறைவரம் வேண்டுவோம்

### குருமட அதிபர் அருட்பணி பாஸ்கரன் அடிகளார்

யாழ்.மறைமாவட்டத்தின் குருத்துவ உருவாக்கலில் மிக முக்கிய இடம் வகிக்கும் புனித மடுத்தீனார் சிறிய குருமடம் தொடர்ந்தும் தன் பணிகளை காலத்திற்கு ஏற்ற விதமாக வழங்கி, தன் முழுமையான பங்களிப்பை செய்ய இறைவரம் வேண்டுவோமென புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தின் 150 ஆவது ஆண்டு ஆரம்ப நிகழ்வில் (1869.11.11. - 2019.11.11) குருமட அதிபர் அருட்பணி S.J.C.பாஸ்கரன் அடிகளார் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக்குருமடத்தில் பயிற்சி பெற்று இன்று குருக்களாக யாழ். மன்னார் மறை மாவட்டங்களில் பணியாற்றும் குருக்களை பாராட்டி வாழ்த்துத் தெரிவித்த அடிகளார் இன்று தேவ அழைத்தல்கள்...

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## சமூக பொறுப்புள்ளோரால் தான் சமூக சீரின்மைகளை நீக்க முடியும்

### கியூடெக் இயக்குநர் அருட்பணி யூஜின் பிரான்சிஸ் அடிகளார்



கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு அரங்கத்தினால் நடாத்தப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், சமூகத்தலைவர்களுடனான கருத்தமர்வு கியூடெக் கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி. ச.யூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் கியூடெக் மண்டபத்தில் நடைபெற்ற போது சமூகப் பொறுப்புள்ளோரால் தான் சமூக சீரின்மைகளை நீக்க முடியுமென அடிகளார் தெரிவித்தார்.

சமூக மட்டத்தில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்த போது போதைப் பொருள் பாவனைகள், வீதி விபத்துக்கள், தொற்று நோய்கள், சிறுவர் பாதுகாப்பின்மை, கல்வியில் பின்னடைவு ,சமய நம்பிக்கைகளில் நாட்டமின்மை போன்றவற்றால் சமூக சீரின்மைகள் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய அடிகளார் இவற்றைக் கட்டுப்படுத்த சமூகப் பொறுப்புமிக்க அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் சமூகத்தை விழிப்பூட்ட வேண்டிய நடவடிக்கைகளை சமூகத் தலைவர்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் சமூகத்தை உண்மையாகவே நேசிப்பவர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இக் கருத்தமர்வில் கிராம உத்தியோகத்தர்கள், கலாச்சார உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதார பகுதி உத்தியோகத்தர்கள், ஊடகவியாளர்கள் சமயத் தலைவர்கள் கலந்து தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

## மறையாசிரியர் வதிவிடப் பயிற்சிக்கான தகுதிகாண் பயிற்சிநெறி



மறையாசிரியர்களுக்கான மூன்று மாத வதிவிடப் பயிற்சியில் 2019 ஆம் ஆண்டு இணையவுள்ள பயிலுனர்களுக்கான பயிற்சிநெறி கடந்த வாரம் மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி A.F.பெனட் அடிகளார் தலைமையில் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியானது கடந்த 18.11.2018 ஞாயிற்றுக்கிழமை முதல் 24.11.2018 சனிக்கிழமை வரை நடைபெற்றது. இப்பயிற்சிநெறியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 28 பயிலுனர்கள் பங்கேற்று தகுதிபெற்றனர். இவ்வாறான பயிற்சிநெறி ஒன்று கடந்த மாதம் கிளி.முல்லை மாவட்டங்களிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.** (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## தேடுங்கள் கண்டடைவீர்கள்

"தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்பது கிறிஸ்து இயேசுவின் அருள்வாக்கு. இது இன்று உலக நியதியாகியும் விட்டது. ஆன்மீகம், அரசியல், அறிவியல், பொருளியல் என அனைத்து துறைகளிலும் இத்தகைய தேடல்கள் வியாபகமாக இருப்பின் மட்டுமே அத்துறைகள் பிரகாசிக்கும் என்பது நிதர்சனமாகும்.

தமிழ்மக்களாகிய நாம் எமக்கு ஒரு நிரந்தர சமாதான அரசியல் தீர்வு வேண்டி பன்னெடுங்காலமாக தேடுகின்றோம். மாநாடுகளில் தேடினோம், வட்ட மேசைகளில் தேடினோம், உடன் படிக்கைகளில் தேடினோம், அரசியல் யாப்புகளில் தேடினோம். தேடிக்கொண்டே இருக்கிறோம் தீர்வு எட்டாக்கனியாகவே காட்சி தருகின்றது.

இந்நிலையில் தென்னிலங்கை அரசியலின் தற்போதைய குழப்ப நிலை தமிழ் மக்களாகிய எங்களுக்கு தீர்வினை எட்டிப்பிடிக்கக் கூடிய நல்லதொரு வாய்ப்பை எம் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு ஊடாக எமக்குத் தந்துள்ளது.

ஜனநாயக விழுமியங்களை மற்றும் பாராளுமன்ற சம்பிரதாயங்களை கட்டிக்காத்துப் பேணிய இலங்கைத் தேசம் அண்மையில் ஏற்பட்ட அரசாங்க கவிழ்ப்பு அதிரடி மாற்றத்தால் அவற்றையெல்லாம் குழிதோண்டிப் புதைத்து நிற்பது வேதனைக்குரியதாகும். "கஜா" புயலின் தாக்கம் எது எப்படியோ இலங்கை அரசியலிலும், நாடாளுமன்றத்திலும் கோரத்தாண்டவம் ஆடும் அரசியல் புயல் தற்போது ஓரளவு தணிவதாக தென்படினும் ஓய்ந்து விடவில்லை.

ஜனநாயகத்துக்கு முரணான பல சாதனைகளை இலங்கைத் தீவு இன்று வரலாற்றில் நிலை நாட்டி வருகிறது. யார் தலைமை அமைச்சர் என தெரியாத நிலையில் இரண்டு தலைமை அமைச்சர்கள். ஒருவர் பிரதமர் செயலகத்தில் வீற்றிருக்க மற்றவர் பிரதமர் வாசஸ்தலத்தில் வீற்றுள்ளார். பாராளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனத்தைக் காணவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்து இருக்கிறார். சமையல் அறைகளில் இருக்க வேண்டிய கத்தி, மிளகாய்த்தூள் (மென்பானக்கலவை) பாராளுமன்றத்துக்குள் கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றம் கூடி அமளிதுமளிகளால் அதனை நடத்த முடியாது பலதடவைகள் ஒத்திவைக்கப்படுகிறது. ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இவ்வாறாக உலகில் எந்த ஒரு நாட்டிலும் நிகழாத ஜனநாயக விரோதப்படலங்கள் இலங்கை தேசத்தில் அரங்கேற்றப்பட்டு நாடாளுமன்ற அமர்வு கேலிக்கூத்தாகி, யுத்த களமாகி, அரசியல் அமைப்பு மீறப்பட்டு உலகமே எம்மைப் பார்த்து சிரிக்கும் அளவிற்கு வேடிக்கை அரசியல் மனிதர்களானோம்.

இத்தனைக்கும் மத்தியில் தமிழர் தரப்பு மூன்றாவது சக்தி மிகு தரப்பாக பேரம் பேசப்பட்டு வருகிறது. சோற்றுக்கு சோரம் போகாத தமிழ் தேசியமாக நாம் கட்சி பேதங்களுக்கு அப்பால் கைகோர்த்து செயற்பட வேண்டிய கணத்தில் உள்ளோம். ஆனால் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பது தான் இன்று சிந்திக்க வேண்டிய முதன்மை விடயம். "தமிழ் மக்களுக்காக", "அனைத்தும் தமிழ் மக்களின் நலன்களுக்காக" என வாய்ச் சொல்லில் வீரம் விளைக்கும் அரசியல் வித்தகர்களாக பாதையைப் பார்த்து பயணத்தை தொடராமல் வானத்தைப் பார்த்து வழிதவறி விழப்போகும் சமிக்ஞைகள் தான் ஆங்காங்கே தெரிகின்றன.

ஐ.நா.வின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு கால அவகாசம் வழங்கி, எம்மை பிரித்தவர்களுடன் கூட்டுச் சேர்ந்து, அடுத்த பொங்கலுக்குள், தீபாவளிக்குள், நத்தாருக்குள் தீர்வு கிடைத்துவிடுமென காலத்தைப் போக்கி, மக்களை ஏய்த்து, காப்பற் வீதி மாயைகளில் சிக்குண்ட தமிழ்த்தேசியம் இன்று தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்குமானால் எந்தப் பூதத்துடன் இணையத் தயார் என்று கூறி நிற்பது நகைப்பிற்கிடமானது. இது இலங்கையின் முன்னால் ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தன "எனக்கு தேவையென்றால் பிசாசுடனும் கூட்டுச் சேர்வேன்" என்று கூறியதை நினைவுபடுத்துகிறது.

மீள்குடியேற்றம், வாழ்வாதாரம், நில மீட்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம் என பல தரப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளை பரிசீலிக்க தயாராக இருப்பவருடன் இணைய நாம் தயார் என தமிழ்த் தேசியத் தலைமைகள் தற்போது அறிக்கை விடுகின்றது எனில் இதுவரை காலமும் இவ்விடயங்கள் தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை என்பதே மறுபக்கதில் ஒலிக்கிறது. இத்தகைய தீர்வைத் தேடமுடியாத தமிழ்த் தலைமைகளைத்தான் நாம் இதுவரை காலமும் நம்பியிருந்ததுடன் விரைவில் நடக்க இருக்கும் அடுத்த தேர்தலிலும் இவர்களைத்தான் மீளவும் தெரிந்தெடுக்கப்போகின்றோம். தொடர்ந்தும் மக்களை ஏமாற்றாமல் இனியாவது தமிழ்த் தலைமைகள் நிமிரவேண்டும்.

ஜனநாயக விழுமியங்களை பின்பற்றி நீதி, நேர்மையுடன் கூடிய தீர்வு ஒன்றை பெறக்கூடிய வகையில் ஆணித்தரமான வாக்குறுதிகளைப் பெற்றுக்கொண்டு தேசத்தினதும், சிறுபான்மையின மக்களினதும் குறிப்பாக போர் வலி சுமந்து வாடும் தமிழ் மக்களினதும் சுதந்திரமான சுபீட்சமான வாழ்விற்குகந்த தீர்வொன்றை இவ்வேளையில் தேடிப்பெறுவதில் தமிழ்த் தேசிய தலைமைகள் தங்களை பெருமைக்குரியர்களாக அடையாளப் படுத்திக்கொள்ளவேண்டும். போலித்தமிழ்த்தேசியம்பேசிதொடர்ந்து தீர்வைத் தேடாமல் கதிரைகளைப் பிடித்துக் கொண்டும், பக்கம் சாரும் ஊது குழல்களாகவும் காலம் கழிப்போமாக இருந்தால் "வெண்ணை திரண்டு வரும் வேளை தாழி உடைந்த கதையாக" மீண்டும் தமிழினம் வரலாற்றில் சிதறடிக்கப்படும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது தான் புத்திசாலித்தனம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# செபிப்போரின் நாளுக்கென திருத்தந்தை வழங்கிய செய்தி

ஆழ்நிலை தியானத்தின் வழியே செபத்தால் திரு அவையைத் தாங்கிவரும் துறவியர் இல்லையெனில் இவ்வுலகில் பயணம் செய்யும் திருஅவை வலுவிழந்து போகும் என செபிப்போரின் நாளுக்கென வழங்கியசெய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆழ் நிலை தியான வாழ்வை மேற்கொள்வதன் வழியே இறைவனின் முகத்தைக் காண்பதிலும், திருஅவையின் மறைப்பணியில் ஈடுபடுவதிலும் இணைந்துள்ள அனைத்து துறவியரையும் வாழ்த்துவதாக திருத்தந்தை தன் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

நவம்பர் 21 புனித கன்னி மரியா காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட திருநாளில் ஆழ்நிலை தியானத்தை தங்கள் வாழ்க்கைப் பாதையாக தெரிவு செய்துள்ள இருபால் துறவியரின் உலக நாளும் சிறப்பிக்கப்படுகிறது.

செபிப்போரின் நாளென சிறப்பிக்கப்படும் இந்த நாளன்று உரோம் நகர் புனித ஜான் இலாத்தரன் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் கூடிய துறவியருக்கு திருத்தந்தை அனுப்பிய செய்தியில் இவ்வாண்டு, பெண் துறவியரைக் குறித்த கருத்துக்கள் முதலிடம் பெற்றுள்ளதை சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் துயருறும் பல்லாயிரம் வலுவிழந்தோர் ஆழ்நிலை தியானத்தில் ஈடுபடும் துறவியரின் செபங்களால் தாங்கப்பட்டு வருகின்றனர் என்பதை தன் செய்தியில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நம்பிக்கை இழந்தோரின் வாழ்வில் நம்பிக்கை தீபங்களை ஏற்றிவைக்கும் துறவியருக்கு தன் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

மிக ஆழமான ஆன்மீகத்தைக் கொண்டிருக்கவேண்டிய ஆழ்நிலை தியான வாழ்வு முறையில் இளையோரை உருவாக்கும் முயற்சிகள் இன்னும் தீவிரப்படுத்தப்படவேண்டும் என்றும் இத்தகைய வாழ்வைத் தெரிவு செய்வோரின் எண்ணிக்கையைக் குறித்து கவலை கொள்ளாமல் இவ்வாழ்வைத் தெரிவு செய்வோரின் தரத்தை உயர்த்தும் முயற்சிகள் நமக்குத் தேவை என்றும் திருத்தந்தை இச்செய்தியில் மேலும் எடுத்துரைத்துள்ளார்.

# சுயநலத்தை தாண்டி செயற்படுவதே உண்மை அன்பு



சுயநலத்தைத் தாண்டியதாய் எவ்விதக் கட்டுப்பாடுகளும் அற்றதாய் இருப்பதே உண்மை அன்பு என்ற கருத்தை மையமாக வைத்து தன் டுவிட்டர் செய்தியொன்றை திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ளார் .

"உங்களுக்கு வசதிப்படும் காலம் வரை மட்டுமே அன்பு கூர்பவர்களாக நீங்கள் இருக்க முடியாது. ஒருவரின் சுயநலத் தேவைகளைத் தாண்டியதாகவும், எவ்விதக் கட்டுப்பாடுகளும் அற்றதாகவும் இருக்கும்போதுதான் அன்பு வெளிப்படுத்தப்படுகின்றது" என திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இரஷ்ய கலைகளின் திருப்பயணம் என்ற தலைப்பில் வத்திக்கான் அருங்காட்சியகம் மற்றும் இரஷ்ய கலாசார அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் நவம்பர் 21 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வரை வத்திக்கானில் இலவசக் கண்காட்சி ஒன்று நடத்தப்படுகிறது.

ஏற்கனவே 2016 ஆம் ஆண்டு இரஷ்யாவின் மாஸ்கோ நகரில் பிரபலக் கலைஞர்களின் படைப்புக்களுடன் கலைக் கண்காட்சி நடத்தப்பட்டு வெற்றியடைந்துள்ளதைத் தொடர்ந்து தற்போது வத்திக்கானில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# அயலவரை அணைக்க நாம் கரங்களை விரித்து காத்திருக்கவேண்டும்
– திருத்தந்தை

அக்கறையற்ற மனநிலையோடு கைகளைக் கட்டிக் கொண்டு நிற்பதோ, ஒன்றும் செய்ய இயலாது என்ற மனநிலையோடு கைகளை விரித்தபடி தன் இயலாமையை வெளிப்படுத்துவதோ ஒரு கிறிஸ்தவரின் செயல் அல்ல என்றுகடந்த ஞாயிறு நிறைவேற்றிய திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மறையுரை வழங்கினார்.

சிறப்பிக்கப்பட்ட இரண்டாவது உலக வறியோர் நாளையொட்டி, வறியோர் மற்றும் அவர்களுடன் பணியாற்றுவோர் என 6000த்திற்கும் அதிகமானோர், வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் கூடியிருக்க, அவர்களுக்கு திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசு கிறிஸ்துவைப்போல் அயலவரை அணைக்க நாம் கரங்களை விரித்து காத்திருக்கவேண்டும் என்று கூறினார்.

தேவையில் இருப்போருடன் நாம் கொள்ளும் தொடர்பின் வழியே நம் விசுவாசத்தை வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒரு சமுதாயக் கடமை அல்ல, மாறாக அது இறையியல் சார்ந்த தேவையாகும் என்று தன் மறையுரை யில் கூறியத் திருத்தந்தை, நாமும் நம் மீட்புக்காக நம் சகோதரர் சகோதரிகளுடன் இணைந்து கையேந்திக் கொண்டிருக்கிறோம் என்று விளக்கினார்.

பிறக்கவிருக்கும் குழந்தைகள், சிறார், இளையோர், முதியோர், கைவிடப்பட்டோர், நண்பர்களற்றோர், இயற்கை வளங்களை இழந்தோர் என அனைத்து இலாசர்களின் அழுகுரல்களும் அநீதியால் பிறந்தவையே என்று தன் மறையுரையில் திருத்தந்தை சுட்டிக் காட்டினார்.

அநீதியே இவ்வுலகின் வறுமைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது என்பதைஎடுத்துரைத்ததிருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வறியோரின் குரல்கள் எவ் வளவு ஓங்கி ஒலித்தாலும் செல்வந்தர்களின் கூச்சல்களால் அவை அடக்கப்படுகிறது என்பதை ஒரு கண்டனமாக வெளியிட்டார்.

உலக வறியோர் நாளையொட்டி வத்திக்கான் புனித 6ம் பவுல் அரங்கத்தில் கூடியிருந்த வறியோர்களுடன் இணைந்து திருத்தந்தை உணவருந்தியமையும் குறிப்பிடத் தக்கது.

# இறுதி நாள் குறித்து திருத்தந்தையின் மூவேளை செப உரை

இறுதி நாளில் மானிட மகன் மகிமையில் வருவது குறித்தும் அந்த இறுதி நாள் தந்தையாம் இறைவனைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது எனவும் இயேசு கூறுவது உலக முடிவைக் குறித்த எச்சரிக்கையாக மட்டுமல்லாமல் நிகழ்கால வாழ்வை நன்முறையில் வாழத் தேவையான அழைப்பாகவும் உள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

இறுதி நாள் குறித்து நாம் எப்போதும் விழிப்பாயிருக்கும் வகையில் நிகழ்காலத்தை செம்மையான முறையில் வாழவேண்டும் என்பதையே இயேசுவின் அழைப்பு நமக்கு உணர்த்துகிறது என்று, திருத்தந்தை எடுத்துரைத்தார்.

அந்த இறுதி நேரத்திலிருந்து யாரும் தப்பிக்க முடியாது என்பதை வலியுறுத்திக் கூறிய திருத்தந்தை நம்மை நல்லவர்களாக சித்திரிக்க முனையும் நம் விவேகமும் அனைத்தையும் வாங்க உதவும் நம் செல்வங்களும் இறுதி நேரத்தில் எவ்வகையிலும் பயன்படப் போவதில்லை எனவும் இறைவார்த்தையில் நம்பிக்கைகொண்டு, நம் வாழ்வின் வழியே பிறருக்கு வழங்கியுள்ளவைகளே இறுதி நேரத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் எனவும் கூறினார்.

# யாழ் ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் மூன்றாம் வருடப் பணிப் பங்களிப்புகள்

**அ. மேய்ப்புப் பணிப் பங்களிப்புகள்**

**1. சாதனைப் பணி:**

'விளிம்பு நிலையிலுள்ளோரைத் தேடிச்செல்லுங்கள்' என்ற அறை கூவலோடுதான் ஆயர் தன் பணியை ஆரம்பித்தார். அதன் வழியே செயற்பட்டு வெற்றியும் கண்டும் வருகின்றார். ஆயரின் பணிக்காலத்தின் மாபெரும் சாதனையாகக் கருதக்கூடியது. சில ஆலயங்களில் சேர்க்கப்படாது "பங்கற்ற அநாதைகளாக" வாழ்ந்த பல குடும்பங்களை அவரவர் வாழும் பகுதியிலுள்ள ஆலயத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து அதை நடைமுறைப்படுத்தவும் செய்துள்ளார். இவ்விடயம் எவராலும் எதுவுமே செய்ய முடியாது என்று கைவிடப்பட்ட விடயம். (திருச்சபைச் சட்டத்தில் ஒருவர் ஒரு பங்கில் ஆறு மாதங்கள் வாழ்வாராயின் அவர் அப்பங்கிற்கு அங்கத்துவம் பெற உரிமை யுடையவர்.)

**2. திருப்பலி புதிய மொழிபெயர்ப்பு**

புதிய மொழிபெயர்ப்புத் திருப்பலி நூல்பற்றி எதிர்மயமான எண்ணத்தைச் சிலர் கொண்டிருக்கின்ற அதேவேளை அதனை வரவேற்றுக் கடைப்பிடிப்போர் பலருள்ளனர். இத்திருப்பலி நூலை அதன் குறைகளோடு தானே வர வேற்றுக் கடைப்பிடிப்பதோடு அனை வரும் பிரமாணிக்கமாகக் கடைப்பிடிக்க வும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**ஆ. துறவியர் வாழ்வுப் பங்களிப்பு**

**1.துறவியர் வரவு**

அல்லைப்பிட்டியியல் சல்வற் றோறியன் சபைச் சகோதரிகளை வரவழைத்து அப்பகுதி மக்களின் பல்வகை வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளார். பெண்களின் கல்வியை மேம்படுத்தல் இவரது நோக்கமாக அமைந்துள்ளது. இதற்கு பெண்கள் விடுதி அமைக்கும் திட்டத்தையும் மனதில் கொண்டுள்ளார்.

**2.துறவியருக்கான சிலை எடுப்பு**

அமலமரித்தியாகிகள் சபையின் முதல் யாழ் ஆயரான செமேரியாவிற்கு மரியன்னைப் பேராலாயம் அருகே அழகிய சிலை வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி. திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை ஆகியவற்றை ஆரம்பித்து நம் சமூகத் தின் வளர்ச்சிக்கு வித்திட்ட மறைந்த ஆயர் பெற்றக்கினியின் சிலை யும் எழுப்புவதற்கான நடவடிக்கைக் கும் ஆயர் அறிவுறுத்தல் வழங்கி யுள்ளார். இவர்கள் நம் மறைமாவட் டத்திற்கு அளித்த பங்களிப்புகளை நினைவுகூர்ந்து இவர்களுக்காகச் செபிப்பதற்கு இது வாய்ப்பாக அமைகின்றது.



**இ.ஆன்மீக நலப்பணிகள்**

**1.புதிய ஆலயம் கட்டலும், ஆலயப் புனருத்தாரணமும்.**

தும்பளை லூர்து கெபியருகே அழகிய நற்கருணைச் சிற்றாலயம் கட்டி முடித்து பக்தர்களின் நற்கருணை உறவை மேம்படுத்தியுள்ளார். தரும புரம் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயமிருந்த இடத்தில் புதிய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கச்சதீவில் புனித அந்தோனி



யார் ஆலயம் அழகுறக் கட்டிமுடிக்கப்பட் டுள்ளது. அவ்வாறே சுதுமலையில் புனித யூதா கோயில் புதிதாகக் கட்டி முடிக் கப்பட்டுள்ளது. மேலும் நயினாதீவு புனித அந்தோனியார் ஆயலமும் அபி ஷேகம் செய்யப்பட்டுள்ளது.

மாஞ்சோலை வைத்தியசாலையின் சிற்றாலயம், மாத்தளன் மரியன்னை ஆலயம் போன்றவை புனருத்தாரணம் செய்யப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு-ஒட்டுசுட்டான் வீதி யில் மன்னாகண்டல் பகுதியில் ஒரு கிராமமக்கள் ஆலயமின்றி வாழ்வதைக் கண்டுபிடித்த அருள்தந்தை நிக்சன் கொலின் அடிகளார் இதுபற்றி ஆயருக்கு அறிவித்தபோது அங்கு ஒரு ஆலயம் கட்டுவோம் என்று அவரை அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார். மேலும் ஆயர் இல்லத் தின் சிற்றாலயப் புனருத்தாரணமும் தற்போது இடம்பெற்று வருகின்றது.

**அருட்பணி இராசேந்திரம் ஸ்ரலின்**

**ஈ. குருக்கள், துறவிகள் உருவாக்கம்**

**1. வைபவரீதியாக குருக்களைப் பணிக்கு அமர்த்துதல்:**

குருக்களுக்கு திருஅவை ஆட்சி ரீதியாக நியமனக் கடிதம் வழங்குவ தோடு நில்லாது, உரிய பங்கு அல்லது நிறுவனத்தில் அவர்களை வைபவரீதி யாக பணிக்கு அமர்த்தும் நடைமுறை ஆயரால் அறிமுகப்படுத்தப்பட்டு முன் னெடுக்கப்பட்டு வருகின்றமை நல்ல விடயமாகும்.


**2. குருக்கள் உருவாக்கம்**

குருக்களைப் பணிநி- யமனம் செய்வா யினும் சரி, மேற்படிப் புக்கு அனுப்புவதாக இருந்தாலும் அவர் அப்பணிக்குப் பொருத் தமானவரா என் பதைக் கருத்திலெடுத்தே ஆயர் இதனை மேற்கொள்வது தெளி- வாகத் தெரிகின் றது. அவ்வாறே கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகளுக்கும் குருக்களின் ஆளுமைத் தேவை, மேய்ப்பு பணித்தேவை போன்றவற்றைக் கருத்திற்கொண்டே அனுப்பி வைக் கின்றார்.




**3.குருக்களின் தேவை களைக் கருத்தில் கொள்ளுதல்**

ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குப் பணிமனை ஆய ரால் கட்டிக் கொடுக் கப்பட்டுள்ளது. அவ் வாறே தர்மபுரம், வெற்றிலைக் கேணி, கூழாமுறிப்பு போன்ற பங்குகளிலும் பங்குபணி மனை கட்டுவதற்கு ஆயர் ஆயத்த வேலை களை மேற்கொண்டுள்ளார். மேலும், வளலாயில் யுத்த காலத்தில் அழிவடைந்திருந்த குருமடமாணவர் விடுமுறை விடுதியை ஆயர் மீளப்பெற்று புதிய விடுதியும் அதனோடு ஒரு அழகிய சிற்றாலயமும் கட்டி முடித்துள்ளமை குரு மட மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகும்.



**உ. கல்விப்புலப் பங்களிப்புகள்**

**1. கத்தோலிக்க பல்கலைக்கழகம்**

யாழ் புனித மரியன்னை ஆலயத்தின் முன்பாக இருந்த புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய கட்ட டம் இடிக்கப்பட்டு இங்கு பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்கான கட்டிடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.



**2. பல்கலைக்கழக மேய்ப்புப்பணி நிலையம்**

கிளிநொச்சி அறிவியல் நகரில் பல்கலைக்கழகக் கத்தோலிக்க மாண வர்களின் ஆன்மீக நலனுக்காக மேய்ப்புப் பணி நிலையம் கட்டுவதற்கான காணி பெறப்பட்டு அத்திவாரக்கல் போடப்பட் டுள்ளது.

**3.புனித பத்திரிசியார் கல்லூரி வகுப்பறைகள்**

இக்கல்லூரியில் ஆயர் புதிய மூன்று மாடிக்கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டி கட்டிடவேலை துரித கதியில் இடம் பெறுகின்றது.

**4.மாணவர் விடுதி**

புதுக்குடியிருப்பு மாணவர்களின் நலனுக்காக மாணவர் விடுதிய அமைப் பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டட வேலைக்கான ஆயத்தங்கள் இடம்பெறு கின்றன. மேலும், சம்பத்தரிசியர் கல்லூரி மாணவர் விடுதி புனித சின்னப்பர் விடு திக்கு மாற்றப்பட்டுள்ளது.

**5. முன்பள்ளி:**

புங்குடுதீவில் சிறார்களின் கல் வியை மேம்படுத்தும் நோக்கோடு புதி தாக அங்கு சரத் ஜீவன் மழலைகள் முன்பள்ளி கட்டப்பட்டுத் திறந்து வைத் துள்ளார் ஆயர்.

**ஊ. சமூக அபிவிருத்தி**

**சமூகப் பிரச்சினைபற்றிய அக்கறை**

புதுக்குடியிருப்புப் பங்கில் சமூக அபிவிருத்தி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிட வேலைகள் இடம் பெற்ற வண்ணமுள்ளது. மேலும் அல் லைப்பிட்டி ஆலயத்தைச் சேர்ந்த இளை ஞர் யுவதிகள் சுற்றுலா சென்று பயனடைய நிதியை ஒழுங்கு செய்து கொடுத்து மகிழ்ச்சிப்படுத்தினார்.

**எ. ஆளுமைப் பண்புகளும் நிர்வாகத் திறன்களும்**

**1.சிறந்த பிரச்சினை தீ்உக்கும் ஆற்றலாளர்**

ஆயர் தனக்குச் சரியெனப்பட்டதைச் செய்வார். தீர்க்கமான தீர்மானம் எடுத்தால் அதில் பின்வாங்காது அதை நிறைவேற்றுவதிலேயே கவனமாக இருப்பார். எந்தத் தடை வந்தாலும் சலித்துப்போகாது நிதானமாகச் சிந்தித்து தீர்வுக்கான மாற்று வழிகளைக் கண்டறிந்து கடைப்பிடிப்பார்.

**2. ஆணைக்குழுச் செயற்திட்டம்**

ஒவ்வொரு ஆணைக்குழுக்க ளின் தலைவர்களும் கடந்த வருடத்தில் மேற்கொண்ட செயற்திட்டங்கள், புதிய வருடத்தில் மேற்கொள்ளவுள்ள புதிய செயற்திட்டங்கள் போன்றவற்றை மறைக் கோட்ட ரீதியாகக் குருக்கள், துறவியர், பொதுநிலையினருக்குச் செயற்திட்டத்தை விளக்குமாறு பணித்தார். இந்நிகழ்வு மறைக்கோட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்டது.

**3.மீளாய்வும் தொடர்கையும்:**


எந்தச் செயற்திட்டத்தையும் மதிப்பீடு செய்வது இவரது நிர்வாகத்திற னின் ஒரு பலமாகும். ஒரு செயற்திட்டம் இடம்பெற்றால் அல்லது அது நடை முறைப்படுத்தப்பட்டால் அது தொடர்ந்து நடைபெறுகின்றதா என்பது பற்றி எப்போதும் விழிப்பாக இருப்பார்.

**4. தூக்கிவிடும் தந்தை**

வீழ்ந்து நொந்த குருக்களைக் கைகொடுத்துத் தூக்கி அரவணைத்துப் புதுவாழ்வ அளிக்கும் இரக்கம் நிறைந்த தந்தமைப் பண்பு இவரில் தெளிவாகத் தெரியும். தவறுசெய்தோரைக் கண்டிப்ப தும், தண்டிக்க வேண்டியவரைத் தண்டிப் பதும் இவர் அணுகுமுறை. ஆனால் இதற் கும் மேலாக அதே குருக்களை அன்போடு அரவணைத்து அவர்களின் வாழ்வை உயர்த் துவதற்கு ஆவன செய்வதும் இவரில் காணப்படும் சிறந்த ஒரு ஆளுமைப் பண்பு.

# மரணம் நிச்சயமானது... வாழ்வின் முடிவல்ல...

இ.அ.அமலரட்ணம்



**முகவுரை**

இறைவனின் வல்லமையால் படைக்கப்பட்ட இவ்வுலகில் வாழும் எல்லா உயிர்களும் ஒருநாள் இறப்பைச் சந்தித்தே ஆகவேண்டும். இந்த மரணத்திலிருந்து எவரும் தப்பமுடியாது. நுண்ணுயிர்கள் தொடக்கம் மரம், செடி, கொடிகள், விலங்குகள் மற்றும் ஆறறிவும், பகுத்தறிவும் கொண்ட மனிதன் ஈறாக ஒருநாள் இறப்பது நியதியாக உள்ளது. இறைவனின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்ட மனிதன் மரணத்தின் பின் இறைவனோடு சங்கமித்து ஒரு புதிய புனிதமான வாழ்வைத் தொடங்குகின்றான் என்பதே எமது விசுவாசமாக உள்ளது. எனவே தான் "*ஒரு மனிதனுடைய வாழ்வு மரணத்தின் ஊடாக மாறுபடுகிறதே அன்றி, அழிக்கப்படுவதில்லை*" என்று நம்புகின்றோம். இறந்த ஆன்மாக்களை நினைவுகூர்ந்து செபிக்கின்ற இந்த விசேட மாதத்தில் இறந்தவர்களுக்காக செபிப்பது மட்டுமல்ல, எமக்கும் ஒரு நாள் மரணம் உண்டு என்பதை நாம் இறை ஞானத்தோடு ஏற்றுக்கொண்டு எம்மைத் தயார்படுத்தவும் விழிப்போடு வாழவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

**மரணம் உண்மையானது**

ஒவ்வொரு மனிதனும் நீண்ட ஆண்டுகள் வாழ விரும்புவதோடு மரணத்தைக் கண்டு அஞ்சுகின்றான். மரணம் எந்தவேளையிலும் எம்மைச் சந்திக்கலாம். நாம் பிறக்கும் போதே நிச்சயிக்கப்படும் மரணம் இறைவன் சித்தம் கொள்ளுகின்றபோது நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தது போதும் என்று நினைக்கின்ற போது எமது வாழ்வில் ஒரு நிறைவைக் காணும்போது எமக்கு அனுமதிக்கப்படுகின்றது. "*ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனி தன் உயிருள்ளவன் ஆனான்*" (தொடக்கநூல் 2:7). "*மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய், மண்ணுக்கே திரும்புவாய்*" என்ற கூற்றின்படி மரணம் நிச்சயப்படுத்தப்படுகின்றது. நிலைவாழ்வில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு மரணம் பயங்கரமானதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருந்தாலும் மறு உலக வாழ்வு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையுள்ளவர்களுக்கோ அது ஒரு மகிழ்ச்சியான நிகழ்வாகவும் உள்ளது. அதனால்தான் "*மரணம் நிலைவாழ்வின் தங்கத் திறவுகோல்*" என்று அறிஞர் மில்டன் அவர்களும் "*அறிவிலி மரணத்தைக் கண்டு மிகக் கொடிய தீமை என அஞ்சுகின்றான். ஆனால் விவேகியோ அதில் நம்பிக்கையுள்ளவனோ இவ்வுலக வாழ்வுக்குப் பின் கிடைக்கின்ற நித்திய இளைப்பாற்றி என்று ஞானத்தோடு ஏற்றுக்கொள்கின்றான்*" என்று புனித அம்புறோசியாரும் சொல்கின்றனர்.

**கிறிஸ்தவனின் மரணம்**

மரணம் என்று சொல்லும்போது அது ஒரு பயங்கரமான நிகழ்வு என்று அனைவரும் நடுங்குகின்றனர். நாம் பிறக்கும்போதே எமக்கு மரணம் நிச்சயிக்கப்படுகின்றது. அதை நாம் எதிர்கொண்டு ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். மரணத்தைத் தோற்கடித்து வெற்றி வீரனாக உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்து மரணத்துக்குப் பின்னால் மறு உலக வாழ்வு ஒன்று உண்டு என்பதை எமக்கு எண்பித்திருக்கின்றார். மரணம் வாழ்வின் முடிவல்ல, மாறாக நிலைவாழ்வின் வாயில் எனச் சொல்லியிருக்கின்றார். "*இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டிருக்க உங்களில் சிலர் இறந்தோர் உயிர்த்தெழுவதில்லை எனச் சொல்வது ஏன்? இறந்தோர் உயிர்த்தெழமாட்டார் எனில், கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும்*" (1கொரி. 15:2-12) என்ற இறைவார்த்தை மரணம் தொடர்பான அச்சத்தை அகற்றுகின்றது. "*நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனித கையால் கட்டப்படாதது, நிலையானது என்பது நமக்குத் தெரியும் அல்லவா*" என்ற இறைவார்த்தையும் மறுவாழ்வுக்கான நம்பிக்கையை அதிகரிக்கின்றது. எனவே கிறிஸ்துவினால் மீட்படைந்த நாங்கள் அவருக்குள் இறப்பதை பயமின்றி மகிழ்வோடு ஏற்றுக்கொள்ள எம்மைப் பக்குவப்படுத்துவோம்.

**உறுதிப்படுத்தப்படும் நிலைவாழ்வு**

நாம் இவ்வுலகில் இறைவனின் பிள்ளைகளாக படைக்கப்பட்டது அவரை நிறைவாக அன்பு செய்து ஆழமான நம்பிக்கை கொண்டு வாழ்ந்து மரணத்தின் ஊடாக அவரோடு இறையரசில் இணைந்து கொள்வதற்காகவே என்பதை நாம் நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்கின்றோம். நாம் எமது அழைத்தலிலே பிரமாணிக்கமாக வாழ்ந்து கிறிஸ்துவின் உன்னதமான சீடத்துவத்திற்கு சான்றுபகர்ந்து இறைவனுக்கு உகந்த நிலையில் ஆன்மீக வாழ்வைப் பேணி மரணத்தை சந்திப்போமாக இருந்தால் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும். "*நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளனே! சிறிய பொறுப்புக்களில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புக்களில் உம்மை அமர்த்துவேன். தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்*" (மத்.25:21) என்ற இறைவார்த்தையும் "*என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. அப்படி இல்லையெனில் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப்போகின்றேன் என்று சொல்லியிருப்பேனா? நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்பொழுது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்*" (யோவான்.14:2-3) என்ற இறைவார்த்தையும் நிலை வாழ்வு உண்டு என்பதை உறுதிப்படுத்துகின்றது. அத்துடன் கல்வாரி மலையில் இறுதி நேரத்தில் மனம் மாறி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நல்ல கள்வன் "*இயேசுவே! நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும் என்று கேட்டதற்கு, நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்லுகின்றேன்*" (லூக். 23:42-43) என்ற இறைவார்த்தைப் பகுதியும் நிலைவாழ்வை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

**மரணம் மகிமையானது**

இறைமகன் இயேசுவின் இவ்வுலகப் பணிகள் முழுவதும் இறையரசைச் சார்ந்ததாக இருந்தது மட்டுமல்ல தவறிப்போனதை மீட்கின்ற பணிகளாகவும் அமைந்திருந்தது. "*நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்*" (யோவா.10:10) என்று தன் பணிகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றார். எனவே ஒரு கிறிஸ்தவனின் மரணம் கிறிஸ்துவுக்குள் இறந்து விண்ணகத் தந்தையிடம் செல்லும் ஒரு பயணமாக அமைகின்றது. எவ்வாறு இறைமகன் கிறிஸ்து சிலுவை மரணத்தின் ஊடாக தன் தந்தையோடு இணைந்து கொண்டாரோ அது போல நாமும் இறை தந்தையோடு எம்மை இணைத்துக் கொள்கின்றோம். இவ்வாறு மரணத்தின் ஊடாக இறைவனோடு இணைந்து கொண்டவர்கள் எப்பொழுதும் மூவொரு இறைவனின் பிரசன்னத்தில் புனித மரியாவோடும், சகல புனிதர்களின் தோழமையோடும் மகிழ்வோடு இருக்கின்றார்கள். எனவேதான் ஒரு கிறிஸ்தவனின் மரணம் மகிமையானது என்று சொல்லப்படுகின்றது.

**நிறைவாக**

இறந்தோரை நினைத்து செபிக்கின்ற இம்மாதத்தின் இறுதி நாட்களில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எனவே மரணம் நிச்சயமானது, நிலைவாழ்வுக்கான நுழைவாயில் என்பதை ஏற்றுக்கொண்டு துணிவோடு சந்திப்போம். "*வழியும் உண்மையும், வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை*" (யோவா:14:14) என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டு எமது வாழ்வை நிலைவாழ்வை நோக்கி பயணிக்க விடுவோம். "*ஒரு கிறிஸ்தவன் இறக்கின்ற போது அவனுடைய ஆன்மா இறைவனுக்கு உகந்ததாக இருந்தால் மட்டுமே அது நல்ல மகிமையான, புனிதமான மரணமாக இருக்கும்*" என்பதை உணர்ந்து நாம் வாழ்வோம்.

# புனிதரின் வழியில் பயணிப்போம்

யோ. யோய் பேர்சி
சுன்னாகம் பங்கு



யாழ். மறை மாவட்டத்தில் ஐந்து நாட்களாக தன் பயணத்தை முடித்துக் கொண்டு சென்ற புனித யோசவ்வாஸ் அடிகளாரின் அற்புதச் சிலுவைப் பயணத்தில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தை கடந்த 20.10.2018 அன்று நண்பகல் 11.45 மணியளவில் வந்தடைந்த அற்புத சிலுவை மகாகல்கமுவ அருட்தந்தையர்களின் வழிபாட்டைத் தொடர்ந்து திருச்சிலுவை ஆசீர்வாதம் மற்றும் முத்தி செய்தல் என்பன நடைபெற்றன.

புனித யோசவ்வாஸ் அடிகளாரின் அற்புதச் சிலுவை பயணத்தின் நோக்கம் பற்றிச் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

இது ஒரு மரச் சிலுவையின் அடையாளப்படுத்தலுக்குள் அடங்கிவிட்டதொன்றல்ல. எம் விசுவாச வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைவதற்கு இறைவன் எமக்குத் தந்த ஒரு புனிதமான வாழ்வுக்கு புனித யோசவ்வாஸ் அடிகளாரை அனுப்பி வைத்திருக்கிறார் என்பது தான் புதுமையானதொன்றாக இருக்கின்றது.

தன் நண்பனுக்காக தன் உயிரையும் கொடுக்கும் மேலான அன்பு வேறெங்கிலும் இல்லை என்பதைத் தன் வாழ்வில் காட்டிய புனித யோசவ்வாஸ் அடிகளாரின் பணி வாழ்வில் நாம் இயேசுவைக் காண்கின்றோம்.

என்னைப் பின் செல்ல வேண்டியவன் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும் என்கிறார் இயேசு. இதையே நாம் இந்தப் பயணத்தில் காண்கின்றோம். இன்று நாம் ஒரு அமைதியான, நிம்மதியான வாழ்வை வாழ்கின்றோம் என்றால் அந்த வாழ்வுக்கு காரணமே அந்த சிலுவைப் பயணத்தின் வழியாக எமக்குக் கிடைத்த ஒரு அற்புதம் தான். புனித யோசவ்வாஸ் அடிகளார் இலங்கைத் தீவுக்கு இறைவனால் வைக்கப்பட்ட ஒரு அற்புதப் புனிதர்.

உலகிற்கு உப்பு நீங்கள், உலகிற்கு ஒளி நீங்கள் என்கிறார் இயேசு. எனவே நாங்கள் உப்பாக, ஒளியாக விளங்க வேண்டும். என்பதுவே இப்பய ணத்தின் வழியாக இயேசு எமக்கு கற்பிக்கின்றார்.

இலங்கைத் தீவில் எமது விசுவாசத்தை தழைத்தோங்கச் செய்ய எப்படிப் பாடுபட்டாரோ அந்த பாடுகளுடன் தான், பயணங்களுடன் தான் எமது வாழ்வின் இவ் விசுவாச வாழ்வு எம்மிடையே தழைத்து நிற்கின்றதென்பதை நாம் காண்கின்றோம்.

**நிறைவாக**

இலங்கை திருநாட்டில் எம் மக்களின் துன்பங்கள் துயரங்கள் வாழ்வின் பிரச்சினைகள் ஊடாக நாம் பயணிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். புனிதர் எமக்கு விட்டுச் சென்றிருக்கின்ற அற்புதப் பயணம் தான் சிலுவைப் பயணம்.
பயணிப்போம்
இறை அரசை நிலை நிறுத்துவோம்.

# நாமும் "நற்கருணை" ஆகலாமா?



மனிதன் உள்ளம் மட்டுமல்ல, உடலும் கொண்டவன். உடல் இன்றி மனிதன் இல்லை. உடலின் அகத்தன்மையே உள்ளம்; உள்ளத்தின் புறத்தன்மையே உடல். மனித உள்ளமும் உடலும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து இயங்க முடியாது. அவை ஒன்றிணைத்து இருக்கும் வரைதான் மனிதன் மனிதனாக இருக்கமுடியும்.

ஆனால், உலக சமயங்கள் பெரிதும் உள்ளம் அல்லது ஆன்மாவை மிக உயர்வாக கருதி, மனித உடலைச் சிறுமைப்படுத்தியுள்ளன. அவை ஆன்மா விண்ணைச் சார்ந்தது எனவும், நல்ல எண்ணங்கள், பண்புகள் உடையது எனவும் சித்தரிக்கின்றன. உடல் ஆன்மாவுக்கு எதிரானது என்றும் சாத்தானின் கருவி எனவும் விளக்க அவை முற்படுகின்றன.

இன்று நமது நாட்டில் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கும் மேற்குலக நாகரிகம், புலன் சார்ந்த இன்பங்களையும் சுகங்களையும், உடல் அழகையும், கவர்ச்சியையுமே முன்னிலைப் படுத்துகின்றது. அது மனித உடலை உண்மையிலேயே பெருமைப்படுத்துகின்றது என நாம் கூற இயலாது. மாறாக மனித உடல்களை, குறிப்பாக பெண்களின் உடல்களை, அரைகுறை ஆடைகளைக் காட்டி, அவற்றை வெறும் மோகப் பொருளாகவே சித்தரித்து சிறுமைப் படுத்துகிறது என்றே கூறவேண்டும்.

அண்மைக் காலங்களில் அப்பாவிகளினதும் எத்தனையோ ஆண், பெண் குழந்தைகளினதும் உடல்கள் கொடூர வன்முறைகளுக்கு இலக்காகி சிதைக்கப்பட்டு அவர்களின் இரத்தம் சிந்தப்பட்டது.

இவ்வாறு மனித உடல்கள் சிதைக்கப்படுகின்ற, இரத்தம் அநியாயமாக சிந்தப்படுகின்ற ஒரு சமூக சூழலில் தான் நாம் நற்கருணையை "இயேசுவின் உடல் - இரத்தம்" என கொண்டாடுகின்றோம். நற்கருணை இயேசுவின் உடலின், இரத்தத்தின் அடையாளம். தமது உடலோடும் இரத்தத்தோடும் உண்மை

**அருட்பணி.மா.றேஜிஸ் இராசநாயகம்**

யான உயிருள்ள முழுமையான இறைவனாகவும், மனிதனாகவும் நற்கருணையின் அப்ப - இரச உருவில் இயேசு இருக்கிறார் என்பது கிறிஸ்தவர்களின் உறுதியான விசுவாசம். தனது இராவுணவின் பொழுது அப்பத்தையும், இரசத்தையும் எடுத்து "இது எனது உடல் ... இது எனது உடன்படிக்கையின் இரத்தம் ..." (மத் 26: 26-28) என்று இயேசு கூறினார்.

மறுநாள் சிலுவையில் சிதைக்கப்படவும் சிந்தப்படவும், மூன்றாம் நாள் உயிர்ப்பின் மகிமையை அடையவுமிருந்த தமது உடலையும் இரத்தத்தையும் இறை ஒன்றிப்பின் அடையாளமாக நற்கருணையில் அவர் தம் சீடர்களுக்கு அளித்தார்.

இவ்வாறு, நற்கருணை வழியாக இயேசு நமக்குத் தரும் அவரது உடலும் இரத்தமும் மனிதனுக்குரியவை. மனித இனத்திடமிருந்து அவர் பெற்றவை. எனவே, எல்லா மனித உடல்களினதும் இரத்தத்தினதும் மாண்பை அவை நமக்கு உணர்த்துகின்றன. கொடுமையாக சிதைக்கவும் அநீதியாகச் சிந்தவும்படுகின்ற நமது உடல், இரத்தத்தின் மாண்பை காக்க வேண்டிய கடமையையும் அவை நமக்கு உணர்த்துகின்றன.

இயேசுவைப் போன்று,நமது உடலையும் இரத்தத்தையும் பிறர் வாழ்வதற்காக(வுக்காக) அளித்து, அதன் வழியாக இயேசுவின் உயிர்ப்பின் மாண்பை அடைய வேண்டிய அழைப்பையும் நற்கருணை நமக்கு உணர்த்துகின்றது.

மனித உடலும் இரத்தமும் மாண்புமிக்கவை, புனிதமானவை, தமது உயிர் மூச்சையே கடவுள் அதில் ஊதுகின்றார். (தொ. நூ. 2:7)

வார்த்தை மனுவுருவாகிய போது மண்ணுலகில் மனிதராகிய போது அவரின் உடலும் இரத்தமும் இறைத் தன்மை பெற்றன. இந்த மானிட நிலையிலிருந்து தான் அவர் இறை வார்த்தையைப் பேசினார். நோயாளர்களைத் தொட்டுக் குணமாக்கினார். பாவிகளையும் ஆதரவற்றவர்களையும் அரவணைத்தார். தனது உதிரத்தை சிந்தித்தான் அவர் உலகை மீட்டார்.அந்த உடலையும், உதிரத்தையும் தான் உணவாகவும், பானமாகவும் நற்கருணையில் அவர் நமக்குத் தருகின்றார்.

திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் வழியாக நாம் இயேசுவின் ஆவியைப் பெறுகின்றோம். இயேசுக்கிறிஸ்துவின் உடலையும், இரத்தத்தையும் அருந்துவதன் வழியாக அவரின் ஆவியையும் பருகுகின்றோம். இதனால் தூய ஆவி குடிகொள்ளும் திருக்கோவில்களாக நாம் மாறுகின்றோம். (1கொரி 6:19)

கடவுளின் பெருமைக்காக நமது உடலைப் பயன்படுத்த வேண்டும் என்பதன் பொருள் பிறரை வாழவைக்கும்

> **அண்மைக் காலங்களில் அப்பாவிகளினதும், எத்தனையோ ஆண், பெண் குழந்தைகளினதும் உடல்கள் கொடூர வன்முறைகளுக்கு இலக்காகி, சிதைக்கப்பட்டு அவர்களின் இரத்தம் சிந்தப்பட்டது.**
>
> **இவ்வாறு மனித உடல்கள் சிதைக்கப்படுகின்ற, இரத்தம் அநியாயமாக சிந்தப்படுகின்றது ஒரு சமூக சூழலில் தான் நாம் நற் கருணையை "இயேசுவின் உடல் – இரத்தம் எனக் கொண்டாடுகின்றோம்.**

நற்கருணையாக நமது உடலையும் இரத்தத்தையும் அளிப்பதுதான். எனவே, மனித உடலும் இரத்தமும் என்றும் மதிக்கப்பட வேண்டும். அதன் புனிதம் பேணப்பட வேண்டும்.

தமது குடும்பத்திற்காக தந்தை தமது உடலை உழைப்பாக்குவதும், தாய் தமது உதிரத்தைப் பாலாக்கித் தருவதும் நற்கருணைச் செயற்பாடுகளே. ஊரின் நன்மைக்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் மெய்வருத்தம் பாராது உழைக்கும் நல்லவர்களும் "நடமாடும் நற்கருணைகளே". மற்றவர்களுக்காக தம்மைத் தியாகம் செய்து வாழ்வை அர்ப்பணிக்கின்றவர்களும் இயேசுவைப்போல் "இது எமது உடல், இது பலருக்காக சிந்தப்படும் எமது இரத்தம்" எனக்கூறி தங்களை நற்கருணையாக்குகின்றவர்களே.

## கார்த்திகையின் புனிதம்...

கார்த்திகைத் திங்கள்
காலத்தில் உருண்டோடும்
மாதங்களில் ஒன்றெனினும்
கிறிஸ்தவர் நம் பாதைதனில்
புனிதர்களின் மாதம்
மரணித்த ஆன்மாக்களை
மனதில் பூசிக்கும் மாதம்
தமிழர் நம் பாதைதனில்
தாயக வாழ்விற்கு
தம்மைக் காணிக்கையாக்கிய
கார்த்திகைப் பூக்களின் மாதம்
கார்த்திகையின் புனிதத்தை
காக்கும் கடமைதனை
கரங்களில் அல்ல
மனங்களில் சுமந்து
ஒளிர்விப்போம்...
ஒளிர்வோம்...

## வாழ்க்கைக்கு...

- நன்மை செய்தவனுக்கு நன்றி காட்டு. தீமை செய்தவனை மறந்து விடு.
- எதையும் சாதிக்க அற்புதமான ஆயுதம் நிதானம்,
- வென்றவனுக்கு மலையும் கடுகு. தோற்றவனுக்கு கடுகும் மலை.
- ஆணவமும், அழிவும் இரட்டைக் குழந்தைகள்.
- அற்ப ஆசைகள் பெரிய வெற்றியைத் தேடித் தருவதில்லை.
- சோம்பி நிற்கும் மனிதனிடம் துன்பங்கள் உற்பத்தியாகின்றன.
- இலக்கியங்கள் எல்லாம் மனிதர்களுடைய அனுபவத்தில் உதித்தவையே.
- நீயாகவே முடிவு செய். நீயாகவே செயற்படு. முடிந்தால் நன்மை செய். தீமை செய்யாதே.

**கவிஞர் கண்ணதாசன்**

# மாற்றத்துக்கு வழிவகுக்குமா எம் செபம்?



துறவி ஒருவர் இறவனைத் தேடுவதிலும் பிறர் நல்வாழ்விலும் அக்கறை மிகுந்தவராக இருந்தார். தனது இளமைக்காலத்தில் அவர் இவ்வாறு மிக உருக்கமாக வேண்டினார். "இறைவா! நீர் உலகமனைத்தையும் மனந்திருப்பியருள்வீராக". காலங்கள் உருண்டோடின. ஆனால் உலகிலோ மாற்றங்கள் எவையும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. இப்பொழுது அவருக்கு வாழ்வின் நடுப்பராயமும் ஆகிவிட்டது. ஆகவே தனது வேண்டுதலை இவ்வாறு மாற்றியமைத்தார். "ஆண்டவரே எனது குடும்பத்தைச் சார்ந்தவர்தளையும் என் உறவினர், நண்பர்களையுமாவது நீர் மனம் திருப்பியருள்வீராக" என உருக்கமாகவேண்டினார். பிறர்வாழ்வில் அதீத ஆர்வமுள்ளவராய் தொடர்ந்தும் செபித்துக்கொண்டே வந்தார். அதுவும் நடப்பதாக தெரியவில்லை.மனம் சோராத அவர் தனது தியானத்தை ஆழ்ப்படுத்தினார். தன்னை ஊடுருவி உற்று நோக்கத் தொடங்கினார். மனத் தெளிவையும் கண்டார். ஆகவே முதிர்ச்சியடைந்த வயதில் தனது வேண்டுதலை இவ்வாறு மாற்றியமைத்தார் ."ஆண்டவரே என் அறியாமையை உணர்கிறேன். நான் என்னை மாற்றுவதில் முழு முனைப்புள்ளவனாய் இருக்க அருள் புரியும்" என உள்ளுணர்வுடன் வேண்டினார். இறுதியில் துறவி ஞானத்தின் கதவைத் தட்டியதன் பயன் தன்னில் மாற்றத்தைக் கண்டார். மகிழ்ச்சியடைந்தார். பிறரின் வாழ்வை மாற்றும் வல்லமை தன்னிடமில்லாவிட்டாலும் தன்னை மாற்ற வேண்டிய அருளும் சக்தியும் தன் கையிலுள்ளது என்பதையுணர்ந்தார்.

பிறர் வாழ்வையே உற்று நோக்கி அதில்பெரும் நேரத்தையும் ஆற்றலையும் விரயமாக்க பழக்கப்பட்ட நாம் நம்மையே ஊடுருவி உற்று நோக்கி அங்கே மறைந்திருக்கும் தவறுகள் தப்புக்களை, நெழிவு சுழிவுகளைக் கழைவது மிகக்கடினமான காரியமாகிறது. "மனம் மாறுங்கள்" என்பதே ஆண்டவனின் முதன்மையான பணிப்புரை. .இதை சிரமேற்கொண்டு முனைப்புடன் செயலாற்றியவர்கள் புனிதர்கள், மகான்கள்.

**"நீ மாறு உலகம் தானாக மாறும்", "நீ உன்னையே தேடு" இவை ஞானிகளின் கூற்று. இதன் பொருள் என்ன? பிறர் மனம் மாறச் செபிக்க வேண்டியதில்லை என்பது அர்த்தமாகுமா? அப்படியல்ல நான் மாறுகின்ற பொழுது என்னில் ஒட்டி மறைந்திருக்கும் இருள் அறியாமை, ஆணவம், சுயநலம், புலனிச்சைகள், பற்றுக்களிலிருந்து விடுதலை பெறுகின்றபொழுது என் ஆளுமை மிளிர்கிறது. அறம் ஒளிவீசுகிறது. பரிசுத்தம் பரிமளிக்கிறது. அன்பும் பண்பும், மனிதநேயமும் வாழ்க்கையை மெருகுபடுத்துகிற பொழுது நானும் கிறிஸ்துவில் புதிய படைப்பாய் மாறுகிறேன்.**

பிறர் நல்வாழ்வுக்கு என் அறிவுரைகளை விட என் முன்மாதிரிகையான வாழ்வே உந்துசக்தியாக, சவாலாக அமைகிறது."நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" (லூக்: 5-14) என்பதன்பொருள் இதுவல்லவா? கிறிஸ்துவின் ஒளி என்னில் சுடர்வீசும்பொழுது, பிறர் நல்வாழ்வுக்கு

**அருட்பணி ஜே.திருச்செல்வம் (அமதி )**

அது ஒரு உந்துசக்தியாக, சவாலாக மாறும் என்பதில் என்ன ஐயம்? இதையே இறை வார்த்தையில் நாம் காண்கிறோம்."நேர்மையாளருடைய வல்லமைமிக்க மன்றாட்டு பயன் விளைவிக்கும்". (யாகப்பர்: 5-16) ஆகவே அறிவுரைகளையும் மன்றாட்டுக்களையும் நிறைவு செய்வது நம் முன் மாதிரிகையான வாழ்க்கையே என்பது தெளிவாகிறதன்றோ? மனம் மாறி கிறிஸ்துவில் உருமாற்றம் பெற்றவர்கள் உலகிற்கு ஒளியாக உப்பாக மாறினார்கள்.

**வார்த்தைகள் அல்ல; நிறை வாழ்வே வலுமிக்கது.**

# கடவுள் என்றும் நம்மோடு.....

சிறுவனை அழைத்துக்கொண்டு அவனது தந்தை ஒரு காட்டிற்குச் சென்றார். அப்போது மகனுக்கு ஒரு சவாலை முன்வைத்தார்.

"மகனே. இப்போது உனக்கு முன் ஒரு பெரிய சவால் உள்ளது. அதில் வெற்றி பெற்றால். நீ பெரிய வீரனாகி விடுவாய். இன்று இரவு முழுவதும் நீ தனியாக இந்தக் காட்டிலேயே இருக்க வேண்டும். உன் கண்கள் கட்டப்படும். ஆனாலும் நீ பயப்படக்கூடாது. வீட்டிற்கு ஓடிவந்துவிடவும் கூடாது" என்றார். சிறுவன் ஆர்வத்துடன் சவாலை சந்திக்கத் தயாரானான்.

அவனது கண்களைத் தந்தை துணியால் இறுகக் கட்டினார். பிறகு. தந்தை திரும்பிச் செல்லும் காலடி ஓசை. மெல்ல மெல்ல மறைந்தது. அதுவரை தந்தை அருகில் இருக்கிறார் என்ற தைரியத்தில் இருந்த அவனுக்கு. தூரத்தில் ஆந்தை கத்துவதும் நரி ஊளையிடுவதும் நடுக்கத்தைக் கொடுத்தது.

காட்டு விலங்குகள் வந்து தாக்கிவிடுமோ என்ற அச்சத்தில் அவனது இதயத்துடிப்பு வழக்கத்தைத் தாண்டி எகிறியது.

மரங்கள் பேயாட்டம் ஆடின.

மழை தூறத் தொடங்கியது. கடுங்குளிர் ஊசியாய் உடலைத் துளைத்தது. "அய்யோ! இப்படி நிர்க்கதியாய்த் தவிக்க விட்டு தந்தை போய்விட்டாரே! யாராவது வந்து என்னைக் காப்பாற்றுங்களேன்" என்று பலமுறை கத்திப் பார்த்தான். பயனில்லை. சிறிது நேரத்தில், இனி கத்திப் பயனில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. திடீரென்று அவனுக்குள் ஒரு துணிச்சல். என்ன தான் நடக்கும், பார்ப்போமே என்று சுற்றுப் புறத்தில் கேட்கும் ஓசைகளை ஆர்வத்துடன் கவனிக்கத் தொடங்கினான்.

இப்படியே இரவு கழிந்தது.



விடியற்காலையில் லேசாகக் கண்ணயர்ந்தான். சூரியன் உடம்பைச் சுட்டபோது தான் கண்கட்டைத் திறந்து பார்த்தான். கண்ணைக் கசக்கிக்கொண்டு எதிரே பார்த்தபோது, அவனுக்கு ஆச்சரியம்! ஆனந்தம்! அழுகையே வந்துவிட்டது. "அப்பா" என்று கூவி அருகில் அமர்ந்திருந்த தன் தந்தையைப் பாய்ந்து தழுவிக் கொண்டான்.


"அப்பா நீங்க எப்போ வந்தீங்க?" என்று ஆவலாகக் கேட்டான். சோர்வும் மகிழ்ச்சியும் கொண்டிருந்த அந்தத் தந்தை. "நான் எப்போது மகனே உன்னை விட்டுப் போனேன்" என்றார்.

இரவு இங்குதான் இருந்தீங்களா? பிறகு ஏன் நான் பயந்து அலறியப் போதெல்லாம் என்னைக் காப்பாற்றவில்லை? ஏன் என்னிடம் எதுவும் பேசவில்லை?" என்று கேட்டான்.

"உன் மனோதிடம் வளர வேண்டும். நீ எதற்கும் அஞ்சாத வீரனாக வேண்டும் என்பதற்காக மௌனம் காத்தேன். ஏனென்றால் அச்சத்தின் உச்சத்தை எட்டும்போது. துணிச்சல் தானே வரும்" என்றார் தந்தை. மகனுக்கு தந்தையின் நோக்கம் புரிந்தது.

கடவுளும் அந்தத் தந்தையைப் போலத்தான். நம்மோடு இருக்கிறார். துன்பத்திலும் சோகத்திலும் தவிக்கும் போது துவண்டுவிடாமல், நாம் தீரர்களாக வேண்டும் என்பதற்காகவே பல நேரங்களில் மௌனம் காத்து வெறும் பார்வையாளரைப் போல் இருக்கிறார். ●

# நண்பனுக்கு ஓர் மடல்



*அன்பு நண்பா,*

நலம் பல. உன் கருத்துக்கள் யாவும் இன்றைய சூழலில் இளையோர் மீது குற்றம் சுமத்தும் பல விடயங்கள் பற்றி கூறி இருந்தாய். ஏன் இந்த நிலை என உன் ஆதங்கம் புரிகிறது. குறைகளைக் கூறியே அவர்களை ஒதுங்க வைப்பதை முதலில் மூத்தோர் தவிர்த்து தமது அனுபவங்களை, பொறுப்புக்களாக பகிர்ந்து பார்த்தால் நல்ல அறுவடை காண முடியும் அல்லவா?

இளையோர் பொறுப்பற்று ஒதுங்காமல் உங்கள் இளமையின் சக்தியை சிறந்த முயற்சியால் உங்கள் திறமைகளை சமூக முன்னேற்றத்துக்கு பயன்படுத்த முயன்று பாருங்கள். இதனை நடைமுறையில் வருத்தப்படாத வாலிபர் சங்கம் 5 ஆண்டுகளாக வருத்தப்படுவோருக்கு உதவும் கரங்களாக முன்னேறி பலரது பாராட்டுகள் மற்றும் ஊக்கப்படுத்துதல்களைப் பெற்றதைக் கண்டேன்.

இளையோர் நினைத்தால் சாதிக்க முடியும். இதற்கு பிறரிடம் எதிர்பார்ப்பதை நாமாக எமது சக்திக்கு ஏற்ப உனது நண்பர்களாக இணைத்து சிறுசெயல்களால் வெளிப்படுத்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. மார்கழி மாதம் பாடசாலை லீவு காலம். ஒரு சிலர் ஒளிவிழா என முயலுவார்கள். இந்த சிறுவர்களின் ஒருமாத லீவு பற்றி பெற்றோரோ. சமூக பொது அமைப்புகளோ எந்த திட்டமிடலும் இல்லாத போது புதிய சமூக விரோதிகளை உருவாக்குவதில் சாத்தானின் தூதர்கள் மிக விழிப்பாய் இருக்கிறார்கள் என்பதனை நினைவாக செய்யுங்கள். நற்செயலுக்கு விடும் உனது சக்தியை பயன்படுத்த நண்பர்களுடன் உமது சூழலை திட்டமிட்டு மாற்று. மாறும் சிறுவர்களின் எதிர்காலம் எங்கே? எப்படி? செயற்படுத்தலாம் என எண்ணுவதுடன் காலத்தை கரைத்து விடாதே. மழைக் காலம் இது என சாட்டு சொல்லி ஒதுங்கி விடாதே. இதனை சாதகமாக்கினால் வீட்டுத்தோட்டத்துக்கு உகந்த சூழலை சிறுவரையும், இளையோரையும் இணைத்து சிறுதானிய விதைகளை பகிர வழி செய்யலாம். நோய் பரவாமலிருக்க சிறுசிரமதானங்களை மேற்கொண்டு, குப்பைகளை உரமாக்கி பைகளில் விதைகளை இட்டு கிராமங்களில் அவற்றை விநியோகித்து. வீட்டுத்தோட்ட முயற்சிகளை மேற்கொள்வதுடன் இளையோர்களை இணைத்து கிராமஒற்றுமைக்கும் வழிவகுக்கலாம்.

ஒளிவிழாக்கள் வாழ்வோடு இணைந்ததாக சமூக உறவை பலமாக்குவதாக அமைய வேண்டும். நல்ல மனிதர்களின் உதவி பெற்று இளையோர்கள் சிறு சிறு செயல்களில் முன்னின்று உழைத்தால் நல்ல சமூகம் நமது காலத்தில் மலரும்.

பாடசாலை விடுமுறைக் காலங்களை சிறுவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தியமை பற்றியும், ஒளிவிழாக்கள் அர்த்தத்துடன் அமைந்தமை பற்றியும் அடுத்த மடலில் எதிர்பார்க்கின்றேன். வாழ்த்துக்கள்...

அன்புடன்
செ.யோசப்பாலா
உளச் சமூகச் சீராளன்

# இளையோர் காவியம்... 17

சாதிக்க
என்ன இருக்கிறது
அது உனக்குள்ளே தான்
இருக்கிறது

நீ
சோம்போறி வலையின்
சிக்குகளை அறுத்துவிட்டு
எழு

உலக
இன்பக் கிணற்றுக்குள்
விழுந்தபடியே கிடக்கிறாய்
நீ

பல
தடவைகள் முயற்சி எடுத்திருக்கும்
கிணற்று தவளைகள்
கூட

வறுமையின்
சிலுவையில் தொங்கியபடி
கவியெழுதிய பாரதி
மகாகவி

நீ
சாதனை நாட்களை
தூங்க வைத்திருக்கிறாய்
அடிக்கடி தொலைபேசிகளை
கொடுத்து

மனிதன்
நிர்வாணமாக பிறந்தாலும்
வாழ்க்கைக்கு அழகான
ஆடைபோட்டிருந்தான்
கடவுள்

நீ
தாறுமாறாய் கிழித்து விட்டு
போட்டிருப்பது அலங்கோலமான
ஆடை

எப்பவும்
சாதித்த வரலாறு இல்லை
எப்படியும் ஒரு
வாழ்க்கை

அலங்கார
வீதிகள் அல்ல சாதனையின் பாதை
தேவகுமாரனின் பாடுகளின்
பாதை

பேராசிரியரால் கூட
எட்ட முடியாத உயரத்தில் நிற்கிறான்
எட்டாமாண்டு படித்த
கண்ணதாசன்

நீ
சாதிப்பதற்கும் படிப்புக்கும்
எப்பவும் இல்லை சம்பந்த
கலப்பு

ஒரு
சாதனை அல்ல
நீ பாடமாக்கிவிட்டு பட்டம்
பெறுதல்

எப்பவும்
சாதனையாக இருப்பது
திருவள்ளுவர் போல அறிவை
கண்டுபிடித்தல்

நீ
புனித அன்னை திரேசாவைப் போல
வீதிகளில் இறங்கு

இந்த
உலகத்தில்
பெரிய சாதனை நீ மனிதர்களை
வாழவைப்பது

(தொடரும்...)

உயிரோவியன்


# சிந்திக்க ஓர் சித்திரம்




# வரம் கேட்டு வருகின்றோம்...

பக்தன் ஒருவன்
நீண்டநாள் இறைவனிடம்
வரம் கேட்டு செபித்தான்
திடீரெனத் தோன்றிய கடவுள்
இருவரம் கேள்
தருகிறேன் என்றார்
பக்தன் கேட்டான்
**ஒருவரம்** - நான்
தூங்கும் போது
இறக்கவேண்டும்
**இரண்டாம் வரம்** - நான்
ஒருபோதும்
தூங்கக்கூடாது
கடவுள் சிந்தித்தார்....!
நமது செபங்களும் வரங்களும்
இப்படித்தான் இருக்கின்றன
எனவேதான்
பதிலில்லாமல்
பல வேளைகளில்
பரிதவிக்கின்றோம்...

## காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி. செ. அன்புராசா அமதி

*(தாசன், மன்னார்)*

**கேள்வி:** இலங்கையில் பல மாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிந்துபோய் அவைகளுக்கான தேர்தல் இன்னும் நடைபெறவில்லை. அப்படியிருக்க, 'மைத்திரி ரணில் நல்லாட்சி' அகால மரணமடைந்த நிலையில் பாராளுமன்றத்தைக் ஜனாதிபதி கலைத்திருக்கின்றார். இவற்றை அவதானிக்கின்றபோது இலங்கை நாட்டின் அரசியல் ஆதாளபாதாளத்தில் செல்லுவது தெரிகின்றது. இவர்கள் குழம்பிப்போய் இருக்கின்றார்களா அல்லது தெளிவாகத்தான் எல்லாவற்றையும் செய்கிறார்களா?

**பதில்:** தாசன், இவர்கள் தெளிவாக இருக்கிறார்களா அல்லது குழம்பிப்போய் இருக்கிறார்களா என்பது பற்றித் தெரியவில்லை! ஆனால், இவர்கள் தெளிவாகக் குழம்பிப்போய் இருக்கிறார்கள் என்பது மட்டும் இவர்களின் நடவடிக்கைகளிலிருந்து தெளிவாக நமக்குத் தெரிகிறது!

*(வசந்தன், முல்லைத்தீவு)*

**கே:** 'கஜா' புயல் வடமாகாணத்தையும் பாதித்திருக்கின்றது. தாக்கங்கள், பாதிப்புக்கள் எப்படி?

**ப:** 'கஜா' புயலின் தாக்கம் வடமாகாணத்தில் சில இடங்களில் உணரப்பட்டுள்ளது. ஆதனால், பொருள் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், 'கஜா' புயலில் தாக்கம் இலங்கைப் நாடாளுமன்றத்தைத்தான் பலமாகத் தாக்கியிருக்கிறது என்று சொல்வதைவிட புரட்டிஎடுத்திருக்கிறது எனலாம். இப்போதைக்கு நாடாளுமன்றத்தில் குடி கொண்டிருக்கும் புயல், அங்கிருந்து புறப்படாது போலத்தான் தெரிகிறது. இதுவரையில் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. எதிர்காலத்தில் என்னாகுமோ என பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் வசந்தன்.

*(மது, யாழ்ப்பாணம்)*

**கே:** இலங்கை, 'ஆசியாவின் அதிசயம்' என வர்ணிக்கப்படுகின்றதே! இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**ப:** மது, நீங்கள் சொல்வது முற்றிலும் சரியானதே. எந்த நாட்டில் ஒரே நேரத்தில் இரு பிரதம மந்திரிகளும், ஒரேவேளையில் இரு அமைச்சரவையும் இருந்திருக்கிறது, இயங்கியிருக்கிறது? அது மட்டுமல்லாது, எந்த நாட்டில் இதுவரையில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றமே கூடித் தீர்மானத்தை எடுத்திருக்கிறது! உண்மையில், ஆசியாவின் அதிசயம் என்பதைவிட, உலகில் இதுவரையில் நிகழாத - இனியும் நிகழ முடியாத 'உலக அதிசயம்' என்பதுதான் மிகச் சரியான விடையாக அமையும்.

*(விஜயன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி:** நமது பாராளுமன்றத்தில் அடி-பிடி சண்டை, குத்துவெட்டுத் தாக்குதல்கள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றது? இவர்களை (அரச தலைவர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்) கேட்பதற்கு ஆட்களே இல்லையா?

**ப:** விஜயன், ஒருவன் இருந்தான்! அவன் இருந்திருந்தால் நம்முடைய நாடாளுமன்ற நாம்பன்களுக்கெல்லாம் நலம்போட்டிருப்பான்! என்ன செய்வது? எங்களது துரதிஸ்டவசம்!

*(நந்தா, யாழ்ப்பாணம்)*

**கேள்வி:** நமது சமயத் தலைவர்கள் நாடு குழம்பிப்போய்க் கிடக்கும் இந்த வேளையிலாவது ஏதாவது சொல்லலாம் அல்லவா?

**ப:** பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து சமயத் தலைவர்கள் ஒன்றுகூடி ஓரணியில் நின்று 'செய்துகொண்டிருக்கும் விசர்த்தனங்களை விட்டுவிட்டு ஜனநாயகத்தையும், மனித மாண்பையும், ஒழுக்கத்தையும் பாதுகாக்க முன்வாருங்கள்!' எனச் சொல்வதற்கு நம் மதத் தலைவர்கள் தூக்கத்திலிருந்து விழிக்கவேண்டுமே நந்தா!

*(மதன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி:** பலருடைய அபிப்பிராயங்களையும் கேட்டு ஒரு முடிவும் எடுக்கமுடியாமல் சிலர் தவிக்கின்றார்களே! அவர்கள் என்ன செய்யலாம்?

**ப:** மதன், கர்ப்பவதியான மனைவியை கழுதையின்மீது ஏற்றிக்கொண்டு ஒருவன் கவனமாக அழைத்துச் சென்றான். அவ்வழியே வந்த ஒருவன், "கர்ப்பிணிப் பெண்ணை கழுதைமீது ஏற்றி சவாரி செய்கிறான், மூளையில்லாத முட்டாள்!" என்று சொல்லிவிட்டுச் சென்றான். இதனைச் செவிமடுத்த அப்பெண்ணின் கணவன், யோசித்துவிட்டு கழுதைமீது இருந்த மனைவியை இறக்கிவிட்டு தான் ஏறிக்கொண்டான். கர்ப்பவதியான மனைவி நடந்து வருவதையும் கழுதைமீது கணவன் இருப்பதையும் கண்ட வேறொருவன், "கர்ப்பிணிப் பெண்ணை நடக்கவைத்து, தான் கழுதைமீது சவாரி செய்கிறான், படு பச்சோந்தி!" என்று கூறிவிட்டுச் சென்றான். இவன் இவ்வாறு கூறக் கேட்டதைப்பற்றிச் சிறிது நேரம் சிந்தித்து விட்டு கணவனும் மனைவியும் கழுதையின்மீது ஏற்றிக் கொண்டார்கள். இதனைப் பார்த்த இன்னொருவன், "வாய்பேசத் தெரியாத ஜீவனை வதைக்கிறார்கள்! இதயமில்லா இரு மிருகங்கள்!"" எனக் கூறுகின்றான். இவன் கூறியதைக் கேட்ட கணவனும் மனைவியும் இப்போது என்னசெய்வது என திகைத்தார்கள். இறுதியில், ஒரு முடிவுக்கு வந்தார்கள்! இருவரும் கழுதையில் இருந்து இறங்கி கழுதையோடு சேர்ந்து நடந்தார்கள். இதனை அவதானித்த மற்றொருவன், "ஏறிச் சவாரி செய்யவேண்டிய கழுதையை விட்டுவிட்டு நடந்து செல்கிறார்கள், இரண்டு முழு முட்டாள்கள்!" என்றான். கழுதைகளின் பேச்சைக் கேட்டால் கழுதையாவது நிச்சயம் தானே! ஆகவே, அடுத்தவர் அபிப்பிராயங்களைகருத்துக்களைக் கேட்கலாம், அவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கலாம், ஆனால், சொந்தப் புத்தியைப் பயன்படுத்தி, முடிவு-களை தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

---

# கனிவுடன் செவிசாய்த்தலும் புரிந்து கொள்ளுதலும்

அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

இல்லறம் கனிவுடன் செவிமடுக்க வேண்டும். மனிதனின் உறவு சிறக்க இது ஒரு அடிப்படைத் தேவையாக உள்ளது. இந்த அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய தெளிவான அறிவும், சிறப்பான பயிற்சியும் தேவைப்படுகிறது. நடைமுறை வாழ்க்கையில் பிறரன்பை வெளிப்படுத்துவதற்கான மிகவும் பயனுள்ள ஒரு வழிதான் கனிவுடன் செவிமடுத்தல். எம்மில் பெரும்பாலானோர் ஏதோ ஒரு மறுமொழியைக் கொடுப்பதற்காகவே செவிமடுக்கின்றோம். ஆனால் மற்றவர்களைப் புரிந்துகொள்வது தான் மிக மிக முக்கியமான விடயம் என்பதை மறந்துவிடுகிறோம். எவ்விதப் பராக்கும், கவன சிதறல்களும் இன்றி முழு மனத்துடன், முழு அவதானத்துடன் புரிந்து கொள்வதற்காக கனிவுடன் செவிமடுக்கின்ற பொழுது அங்கு உண்மையான ஆறுதலும், குணமாக்கலும், சுய விழிப்புணர்ச்சியும், வளர்ச்சியும் நிகழ்கிறது. செவிமடுத்தல் என்பது ஒரு அற்புத கலை. மனித இருப்பில் செவிகளின் பங்கு அளப்பரியது. செவிமடுத்தல் என்பது பயிற்சிகளாலும், பொறுமையினாலும் வளரக்கூடிய ஒரு திறமை செவிமடுத்தல். ஒரு உயரிய குணம். அதனால் கிட்டும் பயன்களும் அளப்பரியன. செவிமடுக்கும் போது தான் பேசுபவர் சொல்வதை மட்டுமல்ல, சொல்லாததையும் புரிந்துகொள்ள முடியும். பொறுமையாக செவிமடுத்தல் நம்மைப்பற்றிய நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தும் செவிமடுப்பவர்கள் மதிக்கப்படுகிறார்கள்.

குடும்பங்களில் நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் கனிவுடன் செவிமடுத்தல் பெரிதும் உதவுகின்றது. பெரும்பாலான மனைவிமாரின் முறைப்பாடுகள் என்னவென்றால் தான் சொல்வதை யாருமே காதுகொடுத்துக் கேட்பதில்லை என்பதாகும். நாங்கள் கனிவுடன் செவிமடுக்கின்ற பொழுது மனக் குறைகள் நீக்கி, மன அழுத்தம் நீங்கி புத்துணர்ச்சி பெறுகின்றோம்.

எமது பிள்ளைகளுக்கு அறிவுரைகள் தேவை. சிறந்த வழிகாட்டல்கள் தேவை. ஆனால் அவர்களுக்கு செவிமடுத்து அவர்களின் உண்மை நிலையைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும். எமது பிள்ளைகளுடைய பலம், பலவீனங்களை அறிந்து அவர்களைப் பாராட்டி ஊக்குவிப்பதற்குக் கனிவுடன் செவிமடுத்தல் பெரிதும் உதவுகிறது. சரியான முறையில் செவிமடுப்பதற்கு எங்களுக்கு நல்ல பயிற்சிகள் தேவைப்படுகிறது. மற்றவர்களின் துன்ப துயரங்களை தணிப்பதற்காகவே செவிமடுக்கின்றோம் என்ற ஆழமான விழிப்புணர்வு எமக்குத் தேவைப்படுகிறது. முழுமையான செவிமடுத்தல் மூலம் பிறரன்பை பிறருக்கான மதிப்பைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும்.

**செவிமடுத்தலுக்கான பயிற்சி**

எங்களது உள்ளத்தையும் மனதையும் ஒரு நிலைப்படுத்தி எந்தவித கனிவுடன் செவிமடுக்க நாங்கள் பயிற்சி செய்ய வேண்டும். மற்றவர்களுடைய வார்த்தையின் மூலம் உடலசைவுகள் மூலம் எவற்றைக் கூற விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள அக்கறையுடன், கரிசனையுடன், பொறுப்புடன் செவிமடுக்கப் பயிற்சி பெறவேண்டும். சிறப்பான பயிற்சி நல்விளைவுகளைத் தரும். தொடர் பயிற்சி நிச்சயம் வெற்றி தரும். மற்றவர்களின் துன்பத்திற்கு செவிமடுத்தல் எங்களுடைய உறவுகளில் எவ்வாறு துன்பவேளைகளில் உடன் பயணிக்கின்றோம் என்பது மிகவும் முக்கியம். மற்றவர்களுடைய துன்ப துயரத்திற்கு கனிவுடன் செவிமடுத்துப் புரிந்து கொள்ளும்போது அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கின்றது. மன அழுத்தம் நீங்கிக் குணம் பெறுகிறார்கள். இறைவனுடைய உதவியினால் மட்டுமே மனிதன் பூரணமாக விடுதலை பெற, குணம் பெற முடியும் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். கருணையுடன் செவிமடுத்து புரிந்து கொள்கின்ற போது அங்கு அற்புதம் நிகழுகின்றது. தீர்ப்பிடாத மனமும் கனிவுடன் செவிமடுக்கும் ஆற்றலும் இறைவன் தருகின்ற கொடைகள்.



### கனிவுடன் செவிமடுத்தலுக்கு பின்பற்ற வேண்டிய ஒரு சில வழிமுறைகள்

1. முகம்பார்த்து, கண்களைப் பார்த்து கவனிக்கவேண்டும்.
2. பொருத்தமான மறுமொழிகளை கொடுக்கவும்.
3. முழு அவதானத்தை செலுத்தவும்.
4. பராக்குகளை தவிர்க்கவும்.
5. விரிவாக கதைப்பதற்கு தூண்டவும்.
6. அவரின் மனநிலைக்குச் சென்று அவரை புரிந்து கொள்ள முயற்சிக்கவும்
7. அவரின் தேவைகளை இனம்காணவும்.
8. துன்பத்தை இனம் கண்டு புரிந்து கொள்ளவும்.
9. தீர்ப்பிடாதீர்கள்.
10. நம்புங்கள்.
11. இரகசிய தன்மை காக்கவும்
12. உங்களுடைய கருத்துக்களை அறிவுரைகளை தீர்க்க வேண்டாம்.
13. விபரமாக கதையுங்கள்
14. சந்தேகமின்றி கேள்விகளைக் கேட்டு புரிந்துகொள்ளுதல்
15. உணர்வுகளுக்கு அவதானமாக செவிகொடுத்தல்.

# காவலன் கலசம்

## மறையும் மனிதம்

**மனிதம் என்றால் என்ன?**

பொதுவாக மனிதம் என்று சொல்லும் போது அது மனிதர்களிடத்தே காணப்படும் உயரிய பண்பை குறிக்கும். அந்த மனிதப் பண்பு எந்த ஒரு மனிதனின் மனங்களில் மரணித்து விடுகின்றதோ அன்று அவன் மனிதன் என்னும் தகுதியை இழந்து விடுகின்றான். மனிதப் பண்பு என்று சொல்லும் போது வெறுமனே ஒருவனுடைய உடல் தோற்றத்தையும் வேறு சில குணாதிசயங்களையும் வைத்து அவனை மனிதன் என்று சொல்லி விட முடியாது. ஆண்டவன் எமக்களித்த ஆறாவது அறிவை எவனொருவன் சரி யாக பயன்படுத்துகின்றானோ அவனே உயரிய மனிதனாக போற்றப்படுகின்றான். இத்தகைய மனிதப்பண்பு ஒருவனிடத்தில் மறைந்து அல்லது மரணித்து விடும்போது அவன் வெறும் நடைப்பிணத்திற்கு சமனாகின்றான். இன்றைய உலகில் மனிதனின் பண்புகள் வளர்ச்சி அடைந்த நவீன யுகத்தில் எவ்வாறு அழிந்து வருகின்றது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். உலகில் தோற்றம் பெற்ற அனைத்து மதங்களும் மனிதப் பண்பையே வலியுறுத்துகின்றன. ஒரு மனிதனை புனிதனாக்குகின்ற உயரிய பண்பு கூட மனிதப் பண்புகளை பேணுவதில் தான் கட்டியெழுப்பப்படுகின்றது.

மனிதப் பண்பு ஒருவனிடத்தில் என்றைக்கு அற்றுப் போகின்றதோ அன்றைக்கு தான் வன்முறை கலாசாரத்திற்கு வலை வீசப்படுகின்றது. மனிதர்கள் மனிதர்களாகவே வாழத் தயாராக வேண்டும். இன்றைய உலகிற்கு தேவைப்படுவது தொழிநுட்ப வளர்ச்சிக்கு பதில் மனிதப் பண்பு மிக்க மனிதர்களின் இருக்கையாகும். உலகில் ஒரு சிலர் மகான்களாக்கப்பட்டார்கள். ஒரு சிலர் புனிதர்களாக்கப்பட்டார்கள். இன்றும் சிலர் நோபல் பரிசு பெற்றார்கள், வேறு சிலர் கின்னஸ் புத்தகத்தில் சாதனையாளர்களானார்கள். இந்த எண்ணிக்கை விரல் விட்டு எண்ணக்கூடியவை. அதாவது குரல் விட்டு நாம் சொல்லக்கூடிய ஒரு சில மனிதர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாவே உலகில் வாழ்ந்து விட்டுப் போயினர் மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மனித வாழ்க்கை என்பது மண்ணில் வாழ்வதில் அல்ல பிறர் மனங்களில் வாழ்வதில் தான் தங்கியுள்ளது. பிறர் மனங்களில் இடம் பிடிக்க வேண்டுமாயின் மனித மாண்புகள் மிளிர நாம் வாழ வேண்டும். மனிதம் நம் உள்ளத்தில் நிலை கொள்வதற்கு எல்லாம் அத்திவாரமாக அமைவது அன்பு என்ற மூன்றெழுத்து மந்திரமாகும். உள்ளத்தில் அன்பு ஊற்றெடுக்கு



மானால் மனிதப் பண்புகள் அனைத்தும் நம் மனங்களில் செழிப்பதை எந்த சக்தியாலும் தடுத்து விட முடியாது.

திருவிவிலியத்தில் 1 கொரி. 13:1-2 இல் நான் மானிட மொழிகளில் பேசினாலும், வானதூதர்களின் மொழி பேசினாலும் அன்பு எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன் எனக் கூறப்பட்டுள்ளது. அன்பின் வடிவாக வந்த கிறிஸ்து இயேசுவும் அன்புப் போதனைகளையே விதைத்து நின்றார். இத்தகைய அன்பு கேட்டுப் பெறக்கூடிய ஒன்றல்ல, வாங்கவும் விற்கவும் கூடிய ஒன்றல்ல. அன்பிற்கு விலை அன்பு தான். இத்தகைய அன்பு என்னும் அமுத சக்தியின் மீது எமது மனங்கள் உறையுமேயானால் மனிதம் மனிதமாக மாண்புறும். இதற்கு இறைவன் தான் எமக்கு அருள்பாலிக்க வேண்டும். ஏனென்றால்.

**அறம் செய்ய விரும்பு என்று படிக்கலானோம்**
**அயலார்க்கும் கஞ்சிகொடா நெஞ்சரானோம்**
**முறையாக செபமாலை உருட்டலானோம்**
**முற்றாக சுயநலத்தில் மூழ்கலானோம்**
**இறைவாக்கை இனிமையோடு கேட்கலானோம்**
**இல்லையென்று வருவோரை உறுக்கலானோம்**
**குறையாத ஒளி விளக்கை கையிலேந்தி**
**வாழ்கின்றோம்**
**இறையே குறை தீர்ப்பாயோ?**

**கலாமோகன் பிரகான்**
கலைப்பீட மாணவன் - யாழ் பல்கலைக்கழகம்
(வாழ்வகம் - சுன்னாகம்)

# இயேசுக்கிறிஸ்துவே எம் அரசர்

இயேசுக்கிறிஸ்து இந்த உலகத்தின் அரசர் என்பதனால் மட்டுமல்ல, மாறாக இறைவனும் மனிதனுமான இயேசுக்கிறிஸ்து தன்மனிதத் தன்மையில், தனி வாழ்வில் அவர் தன்னை எந்த அளவிற்கு கையாண்டார். தனக்கு வந்த சோதனைகள் தன்னை ஆளவிடாமல் எப்படி பார்த்துக்கொண்டார் என்று சிந்திக்கும் பொழுது அவர் தம் உணர்ச்சிகளை ஒரு கட்டுக்குள் வைத்ததன் காரணத்தினால், அவர் அரசர் ஆகி நமக்கு தன்னையாளும் திறனை வளர்க்க அழைப்பு விடுக்கிறது.

'மற்றவனை ஜெயித்தவன் வலிமையுள்ளவன், ஆனால் தன்னை வென்றவன் அதிக சக்தி பெற்றவன்' என்றார் லாவோ. ஒரு படையை ஆள்வதை விட தன்னை ஆள்வது மேலெனக் கூறுவார்கள். இதையே விவிலியம் "நகரை அடக்குகிறவரை விட தன்னை அடக்குகிறவரே சிறந்தவர்" (நீதி.மொழி 18:32) எனக் கூறுகிறது.

இயேசுக்கிறிஸ்துவின் ஆட்சி உண்மையின் ஆட்சி. பதவிக்காக, பணத்துக்காக, அதிகாரத்திற்காக ஏங்கும் ஆட்சி அல்ல. பொய்மை இல்லா ஆட்சி. நீதி வழிந்தோடும் தூய ஆட்சி. உண்மையான பாதையில் நடப்பவர்க்கே இந்த ஆட்சியில் பங்குண்டு.

பிலாத்துவிற்கு இயேசு தந்த பதில் 'எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல' (யோவான் 18:36). படைபலத்தையும், ஆயுத பலத்தையும் நம்பிய ஆட்சி அல்ல. அதிகாரத்தைக் குவித்து வைத்து அடக்கியாளத் துடிக்கும் ஆட்சியல்ல. குடும்ப அரசியலை முன்னிறுத்தும் ஆட்சியல்ல. வோட்டுக்களை விலைக்கு வாங்கி வந்த ஆட்சி அல்ல. நாடு பிடிக்கும் வெறியுடன் உள்ள ஆட்சி அல்ல.

ஆளத்துடிக்கும் உலகில் இயேசு ஓடி ஒழிக்கிறார். 5 அப்பங்களையும், 2 மீன்துண்டுகளையும் பகிர்ந்து கொடுத்த பொழுது இயேசுவை அரசராகப் பார்க்கிறார்கள் (யோவா 6:15). ஆனால் இயேசு அறிந்து அவ்விடத்திலிருந்து மறைந்து சென்றார்.

இயேசுவின் ஆட்சி உண்மையின் ஆட்சி. இந்த உண்மை உங்களை விடுதலையாக்கும் (யோவா 8:32) பொய்யில்லாதது உண்மை. நீ கடவுளின் சாயல். நீ கடவுளின் பாவனை (தொ.நூ 1:27). நீ கடவுளின் செல்லப்பிள்ளை (1பேது 2:9). கடவுள் உன்னை அன்பு செய்கிறார் (யோவா 3:16). உனக்காக, உன்னை மீட்க தன் ஒரே மகனை அனுப்பினார். கடவுளின் இரத்தம் உனக்காக, உன்னைக் கழுவிப் பரிசுத்தப்படுத்த (1யோவா 2:2) சிந்தப்பட்டிருக்கிறது. நீ கடவுளுக்கு உரியவன். நீ அனாதை அல்ல. இந்தக் கலப்படமில்லாத, பொய்மையற்ற "உண்மை" தான் இயேசு. இந்த உண்மையை எடுத்துரைத்து வாழ்ந்து காட்டியவர் இயேசு.

எந்த நேரத்திலும் நாம் கடவுளின் அரசில் நுழைய முடியும். யார் யார் இந்த இயேசுவின் உண்மையை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் இறையாட்சிக்குள் வருகிறார்கள்.

இன்றைய உலகில் கிறிஸ்துவின் ஆட்சியில் இருந்து நம்மை அலைக்கழிக்கும், எத்தனையோ வசீகரிக்கும் சாதனங்கள் மனிதன் கைவசம் இருக்கிறது. இதிலிருந்து தப்பித்துக் கொள்ள இச்சூழலில் வாழ்ந்து கொண்டே வென்று காட்ட வேண்டும். "பெரிய அபாயம் எதுவென்றால் நான் என்னை அடக்கி ஆண்டு ஒரு நிலையான தன்மையைப் பெற்றுவிட்டேன். இனி என்னை ஆண்டு கொள்ள அவசியமில்லை என்று நினைப்பதே" என்று கர்தினால் மார்ட்டீன் சொன்னார்.

தட்ப வெப்பநிலையை அடிக்கடி கணிப்பது போல மனிதன் தன்னை ஒவ்வொரு கணமும் கண்காணிப்பது அவசியம். பொதுவாக மனித உணர்ச்சிகள் தான் மனிதனைக் கட்டுப்பாட்டுக்குள் செயற்பட விடாமல் அத்து மீறச்செய்பவை. உதாரணத்துக்கு கோபம் என்ற உணர்ச்சி எல்லோருக்கும் இருக்கும் பிரச்சினைதான். இதன் விளைவுகள் எத்தனையோ பாதிப்புக்களை மனித சமுதாயத்தில் நிகழ்த்தி விடுகிறது. கோபப்படுவது முற்றிலும் தவறு என்று சொல்லமுடியாது. கிரேக்க அறிஞர் அரிஸ்டோட்டில் அருமையாகக் கூறியிருக்கிறார். "யார் யார் சரியான காரணத்திற்காக சரியான மனிதரி

**கலாபூஷணம் புலவர். அரியநாயகம்**

டம், சரியான முறையில், சரியான நேரத்தில், சரியான கால அளவில் கோபப்படுகின்றாரோ அவரே போற்றப்பட வேண்டியவர்".

. நாம் நமது உணர்ச்சிகளின் பொழுது முயற்சி செய்து பார்க்கக்கூடாது. நம்மை அடக்கியாண்டு வாழ்வது கடினமானது தான். ஆனால் நாம் நம்மை அடக்கி ஆளும் பக்குவத்தை வளர்த்துக் கொண்டால் இயேசுவின் இறையரசில் இணைந்து கொள்ள உதவும்.

ஆனால் "தந்தையே உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படியல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்" (லூக் 22:42) என்று கையளித்தது போல் நம்மையும் நம் உணர்ச்சிகளையும் இறைவனுக்கு கையளித்து அவர் நம்மை ஆள முன் வருவோம். நம்மை ஆளும் சக்தி இயேசு அரசரின் கையில் இருந்தால் நிறைவாழ்வு நம் வசமிருக்கும். இறையாட்சி என்பது நாம் உண்பதையும், உடுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக தூய ஆவி அருளும் நீதி, மகிழ்ச்சி, அமைதி ஆகும். (யோவா 14:17).



**உண்மை நிலைக்க வேண்டும் - நாளும்**
**கிறிஸ்து ஆட்சி மலர வேண்டும்**
**தின்மை சிதைய வேண்டும் - பொல்லாத்**
**தீங்குகள் ஒழிய வேண்டும்**
**இன்பம் நிலைக்க வேண்டும்**
**மக்கள் இன்புற்றிருக்க வேண்டும்**
**அன்பு தளைக்க வேண்டும் - உலகில்**
**கிறிஸ்து ஆட்சி மலர வேண்டும்...**

**வாழ்வும்... வீழ்வும்...** பாலஸ்தீனத்தில் கலிலேயக் கடல், சாக்கடல் என இரு கடல்கள் உள்ளன. கலிலேயக் கடல் நன்னீர். இதில் மீன்கள் உயிர்வாழ்கின்றன. இதைச் சுற்றிலும் ஏராளமான மரங்களும், மனிதர்களும் வாழ்கின்றனர். இதனால் இக்கடல் உயிரோட்டத்துடன் இருக்கின்றது. இதற்கு எதிர்மாறாக சாக்கடலில் உப்பு நீர் நிறைந்து எதுவுமே உயிர்வாழ முடியாத சாவின் நிழல் சூழ்ந்திருக்கின்றது. விநோதம் என்னவென்றால் இரண்டிலும் யோர்தான் நதி நீர்தான் பாய்கிறது. கலிலேயக் கடல் யோர்தான் நதி நீரைப்பெற்று தன்னை வளப்படுத்தி. தன்வழியே பாய்ந்தோடி வெளியில் செல்ல வகை செய்கிறது. சாக்கடலில் பாயும் யோர்தான் நதி அங்கேயே தேங்கி தங்கிவிடுகிறது. கலியேயக்கடல் வாழ்வின் அடையாளம். சாக்கடல் வீழ்வின் அடையாளம். நாங்கள் எந்தக் கடல்...?




# இன்றைய சமூகமும் இணையப் பாவனையும்

அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)

இன்றைய நவீன யுகமானது தொழில்நுட்ப மாற்றத்தின் வளர்ச்சியுடன் மிகத் துரித மாக அபிவிருத்தி அடைந்து வருகின்றது: இந்த அபிவிருத்தியில் இணையமும் ஒரு கூறாகும். இணையத்தின் வருகையால் இன்று முழு உலகமும் மனிதனின் உள்ளங்கையில் அடங்கியள்ளது.

தகவல் தொடர்பாடலுடன் விவ சாயம், கைத்தொழில், அரசதுறை, தக வல் தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வித் துறை எனப்பல தொடர்புபடுகின்றன. இணையத்தை பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் பொருளாதார ரீதியில் மாத்திரமன்றி நிர் வாக ரீதியிலும் பல நன்மைகள் கிடைக்கின்றன.

இன்று இணையம் மாணவர்க ளின் நெருங்கிய தோழனாகி விட்டது. இணையம் என்பது அறிவைப் பெறவும் அதனை வளர்த்துக் கொள்ளவும் ஏற்ற ஊடகமாகவும் காணப்படுகின்றது. தேடலை மையப்படுத்தி கல்வி அமைவ தால் அத்தேடலை இலகுவாக மேற்கொள் ளவும், அதை இலகுபடுத்திக் கொள்வதற் கும் சிறந்த ஒரு வழிவகையாகவே இணையம் காணப்படுகின்றது. இணை யமானது உலக அளவில் முழுத்தகவல்க ளையும் உள்ளடங்கலாகக் கொண்டுள் ளது. அறிவியல் விஞ்ஞானக் கருத்துக்க ளும் புதிய கண்டுபிடிப்புக்களும் வளர்ச்சிய டைந்து வரும் இன்றைய கால கட்டத்தில் எமக்கு தேவையானவற்றை தெளிவாக வும், விரிவாகவும் அறிந்து கொள்வதற்கு இணையம் பெருந்துணை புரிகின்றது. இணையத்தில் இவை மட்டுமன்றி விளை யாட்டுச் செய்திகள் , பொது அறிவுத் தகவல் கள், உலகச் செய்திகள், நாட்டு நடப்புக் கள், விவாதங்கள், கட்டுரைகள், வினாத் தாள்கள், கவிதைகள், சித்திரங்கள் உட் பட பல்துறை சார்ந்த தகவல்களையும் பெறக்கூடியதாகவுள்ளது.

**1.விவசாயமும் தகவல் தொழில் நுட்பமும்**

விவசாயத்துறையில் ஏற்பட்டு வரும் நவீன ஆய்வுகளின் பெறுபேறுகளை பரிமாற்றிக் கொள்வதற்கு இணையம் பயன்படுகிறது. இத்தகைய தகவல்கள் விஞ்ஞானிகளிடையேயும் விவசாயிக்கும், மற்றும் சந்தைக்குமிடையே தொடர்பை ஏற்படுத்துவதனால் விவசாயிகள் உடனடி யாக தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. அத்துடன் விவசாய உற்பத்திக்கு தேவையான காலநிலை தகவல்களை பரிமாற்றவும் தகவல் தொழில்நுட்பம் உதவுகின்றது. இத்தகைய தகவல்களை பரிமாற்றிக்கொள்ள உரிய வலையமைப்பை அமைத்து விவசாயிகள் தமக்கிடையே பயன்படுத்த முடியும்.

**2. கைத்தொழிலும் தகவல் தொழில்நுட்பமும்**

கைத்தொழிற்துறையிலும் பல் வேறு பொருட்களையும் கருவிகளையும் அமைக்கும் போது ஆரம்பத்திட்டமிடலை மேற்கொள்ளல், முடிவுப் பொருட்களின் தன்மையை முன்னரே காணக்கூடிய வாறு கணனியில் உருவாக்கல், கருவிக ளின் மாதிரிகளின் இறுதி ஆக்கத்தை வர்ணங்களைப் பயன்படுத்தி முன்னரே காணுதல் போன்ற செயற்பாடுகளுக்கு தகவல் தொழில்நுட்பம் பயன்படுகிறது.

**3.சுகாதாரத்துறையில் தகவல் தொழிநுட்பம்**

பல்வேறுபட்ட மருத்துவ ஆய்வு களுக்காகவும் கணனி தொழில்நுட்பம் பயன்படுகின்றது. அத்துடன் மருந்துகளை தயாரித்தல், அறுவைச் சிகிச்சைகளுக்காக வும் தகவல் தொழில்நுட்பம் பயன்படுகின் றது. MRI Scanner, ECG வரைபு பெறும் கருவி, CT Scanner என்பன சில பயன் படும் கருவிகளாகும்.

**4.கல்வித்துறையில் தகவல் தொழில்நுட்பம்**

இதுவரை காலமும் வகுப்பறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கல்வி இன்று கணனி, மற்றும் இணையத்துடன் தொடர்புபட்டு வீட்டிலிருந்தவாறோ அல் லது பாடசாலையிலிருந்தவாறோ கற்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இணைய வசதியில்லாதவர்களுக்கு இலத்திரனியல் கல்வி நிகழ்ச்சிகள், பாடத்திட்ட இறு வட்டுக்கள் அல்லது இலக்கமுறை ஒளித்தோற்ற வட்டுமூலம் கல்வியை பெற்றுக்கொள்ள முடிகின்றது.

**5.போக்குவரத்துத் துறையில் தகவல் தொழில்நுட்பம்**

நல்லதொரு சாரதியை உருவாக்க நடாத்தப்படும் செயலமர்வுகளில் தொழில் நுட்ப சாதனங்களை பயன்படுத்தி வீதி விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க வழிகாட்டப்படுகின்றது. பேருந்துச்சேவை, புகையிரதச் சேவை, விமானச் சேவை என்பன இன்று Online இல் மேற் கொள்ளப்படுகின்றது. மின்சார புகை யிரதங்கள் இயங்கும் நாடுகளில் அவற் றின் நேரசூசியை கணனி தொழில்நுட்பமே இயக்குகின்றது. விமான நிலையங்களில் பயணிகளின் செயற்பாடுகள் கண்காணிப்பு கருவிகள் (Camera) மூலம் அவதானிக் கப்படுகின்றது.

**6.அரசதுறையில் தகவல் தொழில்நுட்பம்**

அரசதுறை சார்ந்த தகவல்களை மக்கள் அறிந்துகொள்ள, பரிமாறல் என்பவற்றுக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சேவைக் கணனி பயன்படு கின்றது. மக்கள் அரசியல் நிறுவனங் களின் அனுமதியின்றியே பல தகவல் களை பெற்றுக்கொள்ளலாம்.மின்னஞ் சல் மூலமும் பல தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இவ்வாறு இணையத்தினால் பல நன்மைகள் இருந்த போதிலும் சிலர் தீமை பயக்கக்கூடிய விதத்தில் இதனைப் பயன்படுத்தி பல ஆபத்துக்களை சந்திக் கின்றனர். மாணவர்கள் பாடல் கேட்க வும், திரைப்படம் பார்க்கவும், விளை யாட்டு போன்ற பொழுதுபோக்கு விடயங்க ளுக்காக இணையத்தை பயன்படுத்தி அதற்கு அடிமையாகி தமது கல்விச் செயற்பாடுகளிலிருந்து திசை திரும்பி யுள்ளனர். இது தவறான செயலா கும். இணையத்தினால் ஏற்படும் தீமையை அகற்றி நன்மையை பெறுவதில் எமது கவனத்தை திருப்ப வேண்டும்.மாண வர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி புரிந்திடும் இணையத்தை பயன்படுத்தி இளம் முத்துக்களின் அறிவுப்பசியை போக்கிட வழிகாட்டுவோம். அத்துடன் இணையம் உறங்கிக் கொண்டிருக்கும் எமது மூளையை தட்டி எழுப்புகின்றது. எனவே எமக்கு கிடைத்திருக்கும் நவீன வசதிகளைப் பயன்படுத்தி எமது திறமை களையும், அறிவையும் வளர்த்து எமது இலட்சியக் கனவுகளை நிறைவேற்ற வாழ்வில் பயணிக்க பயன்படுத்துவதே இணையப் பாவனையாகும்.

அத்துடன் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சாதனங்கள், இணையம் சம்பந்தப்பட்ட கருவிகளை கையாளும் போது எமது உடலில் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும். மிக நீண்ட நேரம் கணனியில் தமது நேரத்தை செலவிடுவோர் தமது வசதிக்கேற்பவும், உடல் நிலைக்கேற்பவும் தகுந்த சூழலையும், அமைப்பையும் சரி யான முறையில் நிறுவ வேண்டும்.

கணனி இருக்கும் குளிர்சாதன அறை தினமும் சுத்தப்படுத்தி பராமரிக்கப் பட வேண்டும். கணனித்துறையில் பணி புரிவோருக்கு ஏற்படும் கண் பாதிப்புக் களை உடனடியாக வைத்தியரின் உதவியு டன் சீர் செய்ய வேண்டும். இத்துறை யில் பணிபுரிவோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் தமது கண்களை பரிசோதித்துக் கொள்வது சாலச் சிறந்தது.

சிறியவர் முதல் பெரியவர் வரை கண்ணை இமைக்க மறந்து கணனியில் தொடர்ச்சியாக பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கண் இமைக்காத போது கண்ணில் ஒட்சிசன் சமநிலை குழப்பமடைந்திருப்பதால் வறண்ட தன்மை ஏற்படுகின்றது. எனவே தொடர்ச்சியாக கணனியை பார்ப்பதை தவிர்க்கவும். இடையிடையே பச்சை நிறமான இயற்கை தாவர காட்சிகளை பார்ப்பது மிகவும் நல்லது.

அத்துடன் இத்துறைகளில் பணி புரிபவர்கள் கலை, விளையாட்டு, பொழுது போக்கு என்பவற்றில் தம்மை ஈடுபடுத்தி ஒரே முறையான அமர்விலிருந்து தம்மை விடுவித்து, மீண்டும் புத்துயிர்க்கப்பட்ட வாழ்வை புத்துணர்ச்சியுடன் வாழ முற்பட வேண்டும்.

# பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட பிறருக்கு உதவிடும் கரங்கள் புனிதமானவை

"புனிதம் என்றால் என்ன?" என்ற கேள்வியைக் கேட்டால் முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு பேசத் தொடங்கிவிடுகிறோம்."பக்தி மயமாக இருப்பதே புனிதம், தவறாமல் கோவிலுக் குச் செல்வதே புனிதம், புகழ்பெற்ற திருத் தலங்களுக்கு திருப்பயணம் செல்வதே புனிதம். இலட்சங்கள் செலவு செய்து ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்ன தானம் செய்வதே புனிதம், கோடிகளில் ஆலயம் கட்டுவதும், கட்டட உதவி செய்வதும் புனிதம். புண்ணிய பூமிக்குப் பயணம் செய்வது புனிதம் என்றெல்லாம் பலவாறாக நாம் புனிதத்தை வரையறை செய்கிறோம்.

முடிவில் இதயத்தையே தொடா மல் கோவில் மற்றும் ஆலயம் சார்ந்த செயற்பாடுகளிலேயே புனிதத்தை அடக்கி விடுவது மனித அறிவின் சாமர்த்தியம். இறைவன் மனிதர்களின் உதட்டில் மட்டும் வாழ என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் நாம் புனிதமாக பார்க்கிறோம். ஆனால் இறை வன் நமது உள்ளத்தின் அறுக்கத்தால் நம் இதயத்திற்குள் வாழ முடியாமல் மூர்ச்சையடைந்து இருப்பது குறித்து நமக்கு கவலையில்லை. "இதோ நான் வாசற்படியில் நின்று கதவை தட்டுகிறேன்" என ஆண்டவர் அங்கலாய்கின்றார்.

புனிதம் என்றாலே அது இறை வனுக்குரியது என்றும், அது இறைவ-னின் பிரச்சினை என்றும் எண்ணி பழகிவிட்ட தால் நமது செயல்களுக்கு கூட பொறுப் பேற்காமல், "நான் என்ன கடவுளா பிழை செய்யாமல் இருப்பதற்கு?", "நான் என்ன கடவுளா மன்னிப்பதற்கு?" என கேள்விகளை எழுப்பி மனிதர் களிடமுள்ள புனிதத் தன்மையை அங்கீ கரிக்காமல் போவது நமக்கெல்லாம் வாடிக்கையாகி விட்ட வேடிக்கையாகும்.

அல்பேட் நோலன் என்ற இறை யியலாளர் "Jesus Before Christianity" என்ற நூலை எழுதினார். இந்நூல் புனிதம் பற்றிய எமது புரிந்துணர்வுக்கு சவுக்கடி கொடுப்பதாக அமைந்துள்ளது.

அவர் இயேசுவின் புனிதத்தை மாளிகை யிலோ, ஆலயத்தின் மையத்திலோ வைத்துப் பார்க்கவில்லை. மாறாக இயே சுவை புழுதியில் வைத்துப் பார்த்தது அவரது பார்வை. இயேசு ஒரு இறை மகன், கிறிஸ்து அரசர், போதகர், மீட்பர் என்ற பார்வைகளை எல்லாம் தாண்டி நம்மையெல்லாம் கட்டாயப்படுத்தி தெருவுக்குள் இறங்கச் செய்து இங்கே ஆனந்தமாக மக்களோடு உறவாடும் இயேசுவைக் காட்டுகிறார். இவ்வாறு புழுதிக்கு சொந்தக்காரராக இருந்த இயேசுவை அரண்மனை போன்று தோற்றம் தரும் பளிங்கு கூடங்களில் (நமது ஆலயங்கள்) சிறைப்பிடித்த விந்தையை அவர் கேள்விக்கு உட்படுத்துகிறார்.

ஏழையாக பிறந்து ஏழைகளோடு ஏழையாக வாழ்ந்த இயேசுவுக்கு நாம் செலுத்தும் ஆடம்பரம் கலந்த மரியாதை அவரை பொறுத்த மட்டில் ஓர் அவமான மாகவே இருக்கும் என்ற சிந்தனைதெளி வோடு தான் நம்மை அந்நூலிற்குள் அழைத்துச் செல்கிறார் இறையியலாளர் அல்பேட் நோலன்.

புனிதம் என்பதை விளக்குவது கடினம். ஆனால் செயற்படுவது எளிது. ஏனென்றால் புனிதம் என்பது பாமரர்க ளால் புரிந்து கொள்ள முடியாத சித்தாந்தம் அல்ல. அது எல்லோருக்கும் எளிதில் விளங்கக்கூடிய வாழ்க்கை முறை. ஓர் ஏழையும் புனிதத்தில் வாழ



முடியும் ஒரு பணக்காரரும் புனிதத்தில் வாழ முடியும். அப்படியென்றால், புனிதம் என்பது பணத்தில் அடங்கிவிடக்கூடிய ஒன்றல்ல. அது மனம் சம்பந்தப்பட்டது. "Our God is a God of small Things" - "நமது கடவுள் எளிமையான கடவுள்" என்பதை விளக்க ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஒரு வாக்கியம் இது.

எளிமை மனமே புனிதம். சின் னச் சின்ன செயல்களால் கூட புனிதத்தை வாழ்வாக்கலாம். அது எல்லோருக்கும் பொதுவான வாழ்வு முறை. அதை யாரும் வாழ்வாக்கலாம் என்பது நமக்கெல்லாம் இருக்கக்கூடிய நம்பிக்கை.

எனவே, புனிதம் என்பது முத லில் தனிமனிதர் சார்ந்தது (Personal). பிறரை மாற்ற வேண்டும் என்பதல்ல. நான் மாற வேண்டும் என்பதில் தான் புனிதம் அடங்கியுள்ளது. நான் ஒரு நல்ல மனிதராய் வாழ வேண்டும என்ற ஒற்றைப் புள்ளியில் தான் புனிதம் தொடங்குகிறது. முதலில் நம்மில் தொடங் கும் இந்த மனமாற்றம் பிறருக்காகச் செய லாற்ற வேண்டும் என்ற உந்துதலைக் நமக்குக் கொடுக்க முடியும்.

பிறருக்காக நாம் ஆற்றும் பணி எவ்வளவு சிறிய ஒன்றாக இருந்தாலும் அதில் நாம் புனிதத்தைக் காண வேண்டும். ஆனால், நம்மில் மாற்றத்தை ஏற்படுத்திய புனிதம் நம்மிலேயே முடங்கிவிடக் கூடாது. நமக் குள் பிறக்கும் புனிதம் பிறரது வாழ்வைப் பாதிக்க வேண்டும். இந்த வகையில் புனி தம் என்பது பிறரன்புப் பணியில் ஒன்றிப் பதாகும் (Communitarian) இதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்வது அன்னை தெரேசாவின் வாழ்வு.

வெறும் ஐந்து ரூபாய் மட்டுமே கையில் வைத்துக்கொண்டு தனி நபராக கல்கத்தா மாநகரத் தெருக்களில் இறங்கினார் அன்னை தெரசா. இன்று முழு உலகமும் போற்றும் புனிதராக அவர் போற்றப்படுகின்றார்.

**"துன்புறுகிற ஒவ்வொரு மனிதரும் எனக்கு இயேசு வாகவே தென்படுகிறார்"** என்பது அன்னையின் கூற்று. இறைமைக் குணம் கொண்ட புனிதம் பிறருக்கு ஒளியாக மாறும்போது மேன்மை அடைகின்றது. இதுவே உண்மையான புனிதமாகும்.




அருட்பணி S.V.B. மங்களராஜா

### யாழ்ப்பாணத்திருத்தூது மாவட்டத்தில் மகா ஞானொடுக்கத்தின் தேவை - நடைபெற்ற முறை - ஏற்பட்ட மாற்றங்கள்

1848ம் ஆண்டு யாழ்த்திருத்தூது மாவட்டத்தில் வந்திறங்கி பணி வாழ்வில் இறங்கியதும் செமேரியா அடிகளும் அவரது குழுவினரும் இதுபோன்ற மறையறிவிப்பு நாடுகளில் (Mission Countries) ஏன் இன்னும் மகா ஞானொடுக்கங்கள் (Mission Preaching) முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை என்று அங்கலாய்த்தனர். ஆயர் பெற்றக்கீனி இத்திட்டத்திற்கெதிரானவர் இல்லையென்றாலும் ஏன் இதற்கு அப்போது பச்சைக்கொடி காட்டவில்லையென்று முன்னர் பார்த்தோம். இதன் கட்டாயத் தேவையை உணர்ந்த ஆயர் செமேரியா பதவியேற்றதும் களநிலைமை குறிப்பாக மறைப்பணியாளர் பற்றாக்குறை ஆகியவை தொடர்ந்து இருந்தாலும் முன்னுரிமை அடிப்படையில் அந்நாட்களில் கட்டாய தேவையுண்டென இனம்காணப்பட்ட ஊர்காவற்துறை முதல் மகா ஞானொடுக்கத்தளமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

தற்போது திருஅவையில் முக்கிய பேசுபொருளாக உள்ளது 'புதிய நற்செய்தி அறிவிப்பு' (New Evangelization) அல்லது 'மறுநற்செய்தி அறிவிப்பு' (Re-Evangelization) அல்லது 'இரண்டாம் கட்ட நற்செய்தி அறிவிப்பு' (2nd Stage Evangelization) ஆகும். இது முதல் நற்செய்தி அறிவிப்பிலிருந்து (First Evangelization) வித்தியசமானது. புனிதர்கள் பாவிலு, இரனேயுஸ், பற்றிக், சிறில், மெத்தோடியஸ், மற்றும் எங்கள் நாட்டிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய புனித பிரான்சிஸ் சவேரியார் மேற்கொண்ட பணிகள் அநேகமாக இந்த முதல் நற்செய்தி அறிவிப்பு வகையையே சாரும். பின்னர் இம்மறைப்பணியாளர்கள் மறுநற்செய்தி அறிவிப்பிலும் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் வரலாற்று உண்மை. ஒரு விதத்தில் இந்த முதல் நற்செய்தி அறிவிப்பிலும் பார்க்க இரண்டாம் கட்ட நற்செய்தி அறிவிப்பு கடினமானதாகவும் இருக்கலாம். இந்த இரண்டாம் கட்ட நற்செய்தி அறிவிப்புத் தேவையானவர்கள் பல்வேறு பிரிவினராயிருப்பர்.:

**i) தன்னிறைவு எண்ணம் கொண்டவர்கள்:**

இவர்கள் நற்செய்தியைப் பொறுத்த வகையில் தாம் போதியளவு அறிவு பெறாதவர்கள் அல்ல. மாறாக தாம் எல்லாம் நிறைவாகத் தெரிந்தவர்கள் தாம் பெறுவதற்கு எதுவுமில்லையென்று கருதுபவர்கள், ஒருவித ஏனோ தானோ என்ற நிலைக்குத் (indifference) தள்ளப்படுகிறார்கள்.

**ii) ஆழமில்லா இறை நம்பிக்கை கொண்டவர்கள்:**

இவர்கள் முதல் முறையாக நற்செய்தியைப்பெற்றபோது அதன் செய்தி அவர்களது உள்ளத்தில் ஆழமாக ஊன்றப்படவில்லை. முதல் முறையாக அவர்கள் நற்செய்தியைப்பெற்றபோது அது உள்ளாழத்திற்குச் செல்லாது மேல் மட்டத்திலேயே தங்கியிருந்துவிட்டது. இவர்கள் பெற்ற இந்த அனுபவம் இயேசுக் கிறிஸ்து அனுபவத்தால் ஆழப்படுத்தப்படவுமில்லை, அதனால் இதனை தாம் வாழும் சமூகத்திற்குப் பகிர முடியாமலும் போனது.

**iii) அமுக்கப்பட்ட அல்லது உதாசீனம் செய்யப்பட்ட இறை நம்பிக்கை உடையவர்கள்**

பெயரளவில் கிறிஸ்தவர்களாயிருப்பவர்களது நம்பிக்கை தொடர்ந்து வளர்ச்சியடையாத நிலையிலேயேயுள்ளது. இதனை அவர்கள் தம்மை அமுத்தும் ஒரு கருவியாக பார்க்கின்றனர். இவர்களைப் பொறுத்தளவில் சமயம் என்பது பயத்தையும் அடையாளம் காண முடியாத அங்கலாய்ப்பையுமே உண்டு பண்ணுகிறது.

**iv) உறங்கல் நிலையில் உள்ள இறை நம்பிக்கையுள்ளவர்கள்**

இவர்களில் இறைநம்பிக்கை முற்றாகச்செத்துவிட்டது என்று கூறமுடியாது. ஆனால் ஒரு உறங்கு நிலையில், செயலற்ற நிலையில், மறக்கப்பட்ட நிலையில், பணம், வசதிகள், பதவிகள் ஆகியவற்றால் மூடிமறைக்கப்பட்ட நிலையில், இவைதான் இவர்களுடைய விக்கிரகங்களாக (Idols) ஆக உள்ளன.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் பலவற்றை இன்றும் நாம் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. குறிப்பாக எமது முன்னாள் திருத்தந்தை புனித 2ம் அருள் சின்னப்பர் இவற்றையுணர்ந்து மறுநற்செய்தி அறிவித்தலை வலியுறுத்தி வந்துள்ளார். இதன்பின் வந்த 16ம் ஆசீர்வாதப்பரும் தற்போதைய திருத்தந்தையுமான பிரான்சிஸ்ம் இதை வலியுறுத்துவதை அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணத் திருத்தூது மாவட்டத்திலும் இதுபோன்ற ஒரு தேவை இருந்ததை ஆயர் செமேரியா இனம் கண்டுகொண்டார். அப்போது இது மகா ஞானொடுக்கம் என்று (Mission Preaching) என்று வகைப்படுத்தப்பட்டாலும் இதுவும் அடிப்படையில் ஒரு மறுநற்செய்தி அறிவித்தலே (Re-Evangelization or New Evangelization). முன்னதாக 18ம் நூற்றாண்டில் இறுதிப்பகுதியில் ஏறக்குறைய முழுமையாகக் கத்தோலிக்க நாடாக இருந்த பிரான்ஸ் பிரெஞ்சுப் புரட்சியினால் சின்னாபின்னமாகிய கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சிப்பீடம், செயற்பாடுகள், மறைமாவட்ட பங்கு கட்டமைப்புகள், திருவருட்சாதன வாழ்க்கை, குருக்களின் இருப்பு, பாதுகாப்பு ஆகியவை கேள்விக்குறியாதல், பொது நிலையினரின் குழப்பநிலை ஆகியவற்றின் பின்னணியில் உருவான அமல மரித்தியாகிகள் துறவற சபை திரும்பவும் திருச்சபையின் கட்டமைப்பை எல்லா நிலைகளிலும் கட்டியெழுப்பும் இந்த மகாஞானெடுக்கத்தை (Mission Preaching) கையாண்ட ஆயர் செமேரியாவும் பணியார்வமிக்க இளம் குருவாகக் கோர்சிக்காத்தீவின் வெதுவெதுப்பான, திருவருட்சாதனங்களில் அக்கறையில்லாத, சர்வசாதாரணமாகக் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த கத்தோலிக்க சமூகத்தில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தார். அந்த அனுபவத்தைக்கொண்டு இலங்கையின் யாழ் திருத்தூது மாவட்டத்திலும் மகாஞானொடுக்கம் தான் மீண்டும் உயிர்த்துடிப்புள்ள, மறையறிவிலும், கிறிஸ்தவ விழுமிய வாழ்விலும் திருவருட்சாதன நாட்டத்திலும் அக்கறையுள்ள திருஅவையைக்கட்டியெழுப்புவதற்கு ஒரே வழியென்று கண்டுணர்ந்தார்.

(தொடரும்....)

---

# நான் நானாக வேண்டும் ...

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

"பிறக்கும் பொழுது பிச்சைக்காரனாக வந்தாய், இறக்கும் பொழுது கடனாளியாகப் போகாதே"
-அப்துல் றகுமான்

அகப் பயணம் இன்று தேவைதானா? தியானம் இன்றி, 'நான் நானாக வேண்டும்' என்பதை என்னால் கண்டுணர முடிகின்றதா? உள்நோக்கிப் பார்த்து வெளி நோக்கிப் பாய்வதற்கு, கீழ்நோக்கிப் பார்த்து மேல் நோக்கி நகர்வதற்கு அகப் பயணம் அவசியமாகத் தேவைப்படுகின்றது.

*"உட்தியானம் கடவுளை மாற்றுவதில்லை, மாறாக, அது நேர்மையாகச் செபிப்பவரை மாற்றுகின்றது"*
-கிக்கோர்ட்

இறைவனை விருப்போடு சுவைக்கும் நேரமே தியானமாகும் . வரலாற்றுக்கு வந்திருக்கும் நான் என் வரவைப் பதிவு செய்ய வேண்டாமா? அர்த்தமுள்ள முறையில் எனது வாழ்வு வாழப்படவேண்டும். எனக்குள் என்னைத் தேடல் இயக்கப்பாட்டுச் சக்தியை என்னுள் உருவாக்குகின்றது.

**இயக்கப்பாட்டுச் சக்தி 4 படிகளில் இடம் பெறுகின்றது. அவையாவன:**

**1. மீள் பார்த்தல்** - எனது வாழ்வினை மீண்டும் மீண்டும் நேர்நோக்கில் பார்த்தல்
**2.மீள் சிந்தித்தல்** - எனது மனத்தை நேர் சிந்தனைகளால் நிரப்புதல்
**3. கண்டுணரல்** - என்னை நானாக ஏற்று அனுபவித்தல்
**4. நேர்நிலை மாற்றம்** - அடிப்படையான முறையில் மாற்றத்தை அனுபவித்தல்.

மாற்றமாக நான் மாறுகின்றேன். 'ஆம்' என்று சொல்லவேண்டிய சந்தர்ப்பங்களுக்கு 'ஆம்' என்று சொல்ல ஆயத்தமாகின்றேன்.

'இல்லை' என்று சொல்ல வேண்டிய சந்தர்ப்பங்களுக்கு '.இல்லை' என்று சொல்ல ஆயத்தமாகின்றேன்.

வாழ்வியல் பாதையை விட்டுப் பரபரப்படைதல், பராக்குப் பார்த்தல், மயக்க நிலையில் தடுமாறுதல் போன்ற போக்குகளிலிருந்து விடுதலை பெற முயல்கின்றேன்.

சுயசௌகரியங்களுக்காக எனது நிலை வாழ்வைப் பறி கொடுக்காது, போலி இன்பங்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்காது, நேர்த்தியான வாழ்விற்கு வித்திடுகின்றேன்.

**வாழ்வியல் ஆய்வின் கூறுகள் ஏழு. அவை பின்வருமாறு:**

**1. சுய ஆய்வு**

நான் யார்? எனது திறன்கள் எவை? எனது மட்டுப்படுத்தப்பட்ட தன்மைகள் எவை?

நான் நானாக வாழ்வதற்குத் தடையாயிருப்பவற்றைத் தவிர்த்துவிட்டு, துணையாயிருப்பவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நிறைகாண் மனோநிலையில் மாற்றத்தை நோக்கி நான் தொடர்ந்து பயணிக்கும்பொழுது தூய்மையாக்கல் இடம்பெறுகின்றது. . இறைவன் முன்னிலையிலும் மனிதர் முன்னிலையிலும் எனக்குள் இருக்கும் உண்மைத்தன்மையை பலங்களோடும், பலவீனங்களோடும் அப்பட்டமாக ஏற்றுவாழுதல் எனது இருப்பியல் நிலைக்கு ஆதாரமாகின்றது.

**2. திருஅவை ஆய்வு**

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தை ஆரம்பித்தபொழுது திருத்தந்தை 23ம் யோண் 'திருஅவையின் கதவுகளும் யன்னல்களும் திறந்துவிடப்படட்டும். அப்பொழுது உள்ளே உள்ள காற்று வெளியே வர, வெளியே உள்ள காற்று உள்ளே வர சமநிலை அரும்பட்டும்' என்று மொழிந்தார்.

திருத்தந்தை 2ம் யோண் பவுல் 1999ம் ஆண்டு, 2000 ஆம் ஆண்டை வரவேற்று, "பழையது போகாவிட்டால் புதியது புகமுடியாது" என்று மொழிந்தார்.



ஆட்டின் மணம் அறிந்து தேடிச் செல்லும் ஆயன்போல் நானும் பிறர் தேவையை அறிந்து உதவி நல்கிட முன்வரவேண்டும்.

**3. சமூக ஆய்வு**

சாதி, செல்வம், மதம், மொழி எனப் பாகுபாடு காட்டி, பேதங்களை வளர்ப்பது சமூக வளர்ச்சிக்கு இடறலாகவே அமையும். மனிதத்தை மதித்து நேசிக்க நான் மகிழ்வோடு முனைவேனாக.

**4. பிரபஞ்ச ஆய்வு**

இறைவனுக்கும் இஸ்ராயேலருக்கும் இடையே இடம்பெற்ற உடன்படிக்கை இறைவனுக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகக் கருதப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவினால் மனிதரோடு மேற்கொண்ட புதிய உடன்படிக்கை இரத்தத்தினாலாகிய நிலையான உடன்படிக்கையாக அமைகின்றது. இயற்கையோடு, இறைவனோடு இணைந்து மனிதன் தொடர் பயணத்தை மேற்கொள்ள வேண்டியவனாகின்றான்.

**5. இதய மாற்றம்**

தீமையிலிருந்து நன்மைக்கும் நன்மையிலிருந்து மேலான நன்மைத்தனத்திற்கும் நகருகின்ற தொடர்பயணமே இதய மாற்றமாகும். எதிர் மறைப்போக்கிலிருந்து பக்குவப்பட்ட மன நிலைக்கு, கடுமையான வாழ்க்கை முறை யிலிருந்து கருணையான இதய மாற்றத்திற்கு, 'எல்லோரும் பொல்லாதவர்' என்று திட்டிச் சாபம் போடுவதிலிருந்து 'எல்லோரும் நல்லவர்' என ஆசீர்வதிக்கும் நல்ல மனோபாங்கு மாற்றத்திற்கு அசைவுறுவதே இதய மாற்றமாகும்.

**6. விடையின் பகுதியாதல்**

பிரச்சினையின் பகுதியாக இருப்பதை விட்டு, விடையின் பகுதியாக நான் மாறுவதே இன்று தேவையாகும். பிரச்சினையில் குளிர்காய்ந்தது போதும்.

**7. அருள்நிலை**

இலக்குத் தவறி நிற்பதே பாவமாகும். எனது வாழ்வின் வரைவிலக்கணத்தை, நிலைவாழ்விற்கான இறுதி இலக்கை இழந்துவிடாது, இறைவனை ஆதாயமாக்கிக் கொள்வதை இலக்காகக் கொண்டு இயங்குவதே அருள்நிலையாகும். எனவே, என்னை நானாக மாற்றி, என் இதயத்துள் இறைவன், இயற்கை, அயலவர் இயல்பாகச் சங்கமிக்க நான் இயங்குநிலையில் வாழும்பொழுது, எனது உள்ளம் புதுப் பொலிவுற்று பிரகாசிக்கும்.

# புனித பிரான்சிஸ் சவேரியார்

ஒருவன் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் அவன் தன் வாழ்வையே இழப்பான் எனின் அதனால் அவனுக்குக் கிடைக்கும் பயன் என்ன" (மத். 16:26) என்ற இயேசுவின் வார்த்தை கல்வி, செல்வம், பதவி உயர்வு, மதிப்பு முதலான்வற்றை இலக்காகக் கொண்ட இளம் மெய்யியல் மேதை பிரான்சிஸ் சவேரியாருக்கு அவரின் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் பல்கலைக்கழக நண்பரான லொயாலா இன்னாசியாரால் அடிக்கடி சொல்லப்பட்டது. அப்போது பிரான்சிஸ் சவேரியாருக்கு வயது 24. நல்ல நண்பரான லொயலா இன்னாசியாரின் இடைவிடாத நற்தூண்டுதலும், வழிப்படுத்தலும் பிரான்சிஸ் சவேரியாரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதற்கு வழிசமைத்தது.

ஈற்றில் சவேரியால் குழந்தையாய் அப்போதுதான் உருவெடுத்த இயேசு சபையில் பாப்பரசரின் வழிகாட்டலுக்கு உட்பட்டு அப்போஸ்தலிக்க ஆன்மீக பாரம் பரியத்துக்கு அமைவாக ஏழ்மை, கற்பு, பணிவாழ்வு முதலான வாக்குறுதிகளை ஏற்று 1534 இல் கிறிஸ்துவின் பணிச் சுவடுகளைப் பின்பற்ற தன்னை இச்சபையில் இணைத்துக் கொண்டார்.

1537 ஆம் ஆண்டு பிரான்சிஸ் சவேரியார் வெனிசில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு லிஸ்பனுக்குப் பயண-

**அருட்பணி அ. அருள்தாசன்**

மாகி அங்கிருந்து கிழக்கிந்திய நாடுகள்



நோக்கி தன் கடற்பயணத்தை ஆரம்பித்து. இந்தியாவின் மேற்குக் கரையான கோவா நகரை அடைந்தார். அன்று தொடக்கம் தன் 10 ஆண்டு அறுவடைப் பணியில் பரந்து சிதறி வாழும் இந்திய, மலேசிய, சீன, ஜப்பான் தேசித்து மக்களுக்கு இறை நம்பிக்கையை கூட்டலானார்.

சென்ற இடமெங்கும் ஏழை மக்களோடு அவர்களின் இடர்களோடும் தன்னை இணைத்துக் கொண்டார். ஏழைகள், ஊனமுற்றோர், நோயாளர் முதலானோருக்கு பணியாளர் ஆனார்.

ஜப்பான் முதல் தென்னிந்தியா வரையாக எண்ணற்றவர்களை கிறிஸ்துவிடம் கொணர்ந்த பிரான்சிஸ் சவேரியார் சான்சிஸன் தீவில் தன் உயிரை படைத்தவரிடம் கையளித்தார்.

பல நூற்றாண்டுகள் கடந்தும் அழிவற்ற இவரின் திருவுடல் கோவா நகரில் இன்றும் பேணப்படுகின்றது.

**(புனித பிரான்சிஸ் சவேரியார் திருவிழா டிசம்பர் –03)**

## இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி

ஐயா,நீர் எம்மை விட்டு மறைந்து, இன்று அகவைகள் இருபது, ஆனாலும் உணர்கின்றோம் இன்றும் நீர் எம் மனங்களில் இருப்பது!

தந்தையின் இறப்பின் பின்னால் தாயுடனும் தம்பியோடும் துணிவோடு,சிறுவயது முதலேயே குடும்பப் பொறுப்பேற்ற, நீர் ஒரு சுமைதாங்கி!

பெரியவனான பின்பும் பொருள் பெரிதாய் ஈட்டவில்லை ஆனாலும், ஐயா நீர், உம்மை வருத்தி எம்மை எல்லாம் சீராக வாழவைத்தீர்!

கஷ்டங்கள் பலகடந்து,உங்களது குழந்தைகளை கைதூக்கி வழிகாட்டி,கல்வியும் தந்துவிட்டு, பலனை முற்றாய் காணாமல் கண்களை மூடிவிட்டீர்!

ஐயா,நாம் நலமுள்ளோம். கனவுகளில் உம்முகத்தை அடிக்கடி காண்கின்றோம்.அனுதினமும் கடவுளிடம் வேண்டுகிறோம். உம் விண் வாழ்வு சிறந்திடவே!




அமரர்
**அமரர் திரு. சிமியோன்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை (பிலேந்திரம்)**
**போயிட்டி, இளவாலை**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23.09.1916 | 28.11.1998 |

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

AD102

## புனித நீக்கிலஸ்



புனித நீக்கிலஸ் கி.பி.4ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆயராக அறியப்படுகிறார். இவர் லீசியா எனப்படும் துருக்கியின் மீரா நகரின் ஆயராவார். கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளின் திருச்சபைகள் இவரை பெருமைப்படுத்துகின்றன.

இவர் ஏழைகள் மீதான இரக்க செயல்களுக்கு பெயர் பெற்றவராகத் துலங்குகிறார். இதனை புலப்படுத்துவதாக ஒரு சம்பவம் குறிப்பிடப்படுகின்றது. ஒரு ஏழைத் தந்தை திருமணம் செய்யும் வயதுள்ள தன் மூன்று மகள் மாருக்கு சீதனம் கொடுக்க முடியாத நிலையில் வேறு வழியின்றி முறையற்ற வழிமூலம் பணம் பெற தன் மகள்மாரை ஒழுங்குபடுத்தியவேளை புனித நீக்கிலஸ் அடுத்தடுத்த மூன்று இரவுகளில் ஏழையின் குடிசை யன்னல் வழியாக மூன்று பைகளில் தங்க நாணயங்களை வீசிச்சென்றதையடுத்து அம் மூன்று பெண்களுக்கும் திருமணம் நிறைவேறியது. இது நாளடைவில் இவரின் திருநாளன்று பரிசுகள் வழங்கும் வழக்கத்தை கொண்டு வந்தது. ஆங்கிலம் பேசும் நாடுகளில் இவரை "சன்ரகுளஸ்" என அழைக்கின்றார்கள். **(புனித நீக்கிலஸ் திருவிழா டிசம்பர் –06)**

## கனிவு கலாசாரத்தை ஊக்குவிக்க திருப்பீடம் வலியுறுத்தல்

குரு நானக் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு, திருப்பீட பல்சமய உரையாடல் அவை உலகின் அனைத்து சீக்கிய மதத்தவர்க்கு வாழ்த்து செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

கிறிஸ்தவர்களும், சீக்கியர்களும் கனிவு கலாசாரத்தை ஒன்றிணைந்து ஊக்குவிக்க வேண்டுமென்று திருப்பீடம் கேட்டுக் கொண்டுள்ளது.

சீக்கிய மதத்தை தோற்றுவித்த குரு நானக் அவர்கள் பிறந்த நாள் நவம்பர் 23 வெள்ளியன்று சிறப்பிக்கப்படுவதை முன்னிட்டு, உலகின் அனைத்து சீக்கிய மதத்தவர்க்கு வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ள, திருப்பீட பல்சமய உரையாடல் அவை, உலகில் அனைவரின் நல்வாழ்வுக்காக, கிறிஸ்தவர்களும் சீக்கியர்களும் கனிவன்பு கலாசாரத்தை ஊக்குவிப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு கூறியுள்ளது.

ஒருவர் ஒருவரை புறக்கணிக்கின்ற மற்றும், தன்னலம் மிகுந்த கலாசாரம், ஏறத்தாழ எல்லா இடங்களிலும் வேரூன்றுவதாகத் தெரிகின்ற இக்காலத்தில், கனிவு கலாசாரம் ஊக்குவிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது என்று, அச்செய்தி கூறுகின்றது.

குடும்பங்கள், சமயப் போதனைகள், கல்வி நிறுவனங்கள், ஊடகங்கள் போன்றவை, சிறார், மாணவர்கள் மற்றும் ஏனையோரில் கனிவு கலாசாரத்தைப் பேணி வளர்க்க இயலும் என்றும், திருப்பீட பல்சமய உரையாடல் அவையின் செய்தி கூறுகின்றது.

குருநானக் பல்வேறு இடங்களுக்கு பயணம் மேற்கொண்டு ஒரே கடவுள் கொள்கையைப் போதித்தார்.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கலகலத்த உன் பேச்சு கானல் நீரானதுவோ
கனிவான உன் வதனம் நீராகி போனதுவோ
அருகிருந்து எமை அரவணைக்க இங்கு
அருமையான எம் அம்மா இல்லை இன்று
பெருமையாய் உன் நிழலில் வாழ்ந்த காலம்
வெறுமையாய் போனதுவே கண்ணில் நீர்
சொரிந்து கலங்குகின்றோம் உம் ஆன்மா
இறைபதத்தில் வாழ அனுதினமும்

அம்மாவின் இறுதிச்சடங்கில் பங்கு கொண்டு அனுதாபத்தை தெரிவித்த ஆயர், குருக்கள், துறவியர், உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவருக்கும் எமது நன்றிகள்

அமரர்
**மேரி ஜோசேப்பின் பாக்கியநாதர் (ராணி)**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08.09.1937 | 26.10.2018 |

"இதோ உன்னை பெயரிட்டு நாமே அழைத்தோம் ஆகவே நீ எனக்கே சொந்தம்" (எசாயா 43:1)



AD101

பெரிய விளான்
இளவாலை

தகவல்
பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி



*சிந்தாத்துரை இராசமணி*

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18.12.1945 | 24.10.2018 |

"மன உறுதியோடு நற்செயல் புரிந்து மாட்சி, மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடுவோருக்கு நிலை வாழ்வை வழங்குவார்" (உரோமர் 2:7)

**அம்மா என்றொரு ஆலமரம்**
**அதில் 73 ஆண்டுகள் நிழலை சுவைத்தோம்**
**எம்மை அன்புடன், பாசமுடன் வளர்த்தாய்**
**இன்று உங்கள் அன்பின்றி, ஆதரவின்றி**
**துயரமதில் ஆழ்ந்திருக்கின்றோம் அம்மா!**

AD103

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்

பிரிவால் துயருறும்
கணவர், மகள்,
மருமகள்,
பேரப்பிள்ளைகள்



முல்லைத்தீவு மறைக்கோட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தமர்வும் ஒன்றுகூடலும் அண்மையில் புதுக்குடியிருப்பில் நடைபெற்றபோது யாழ் மறைமாவட்ட அன்பிய இயக்குநர் அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாருடன் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மறைக்கோட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்கள்...



அருட்பணி சறத்ஜீவன் பவுண்டேசன்" எனும் தொண்டுப்பணியின் தூரநோக்கு எமது மண்ணில் ஏற்பட்ட அனர்த்தங்களாலும், வாழ்வாதார பின்னடைவுகளாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வியை மேம்படுத்துவதாகும். யாழ், வன்னி மாவட்டத்தில் உள்ள முல்லைத்தீவு, மல்லாவி, உருத்திரபுரம், பூநகரி, இரணைப்பாலை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் தேர்ந்தெடுத்த 89 மாணவர்களின் கல்விகளுக்கான உதவித்திட்டங்கள் இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# இணக்கப்பாட்டை ஏற்படுத்தவே அரச தலைவர் செயலகம் சென்றேன்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை



இலங்கை அரசில் அதிரடியாக ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தானும் தம்மலங்கார தேரரும் தயாராக இருப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு கூறியதாகவும் அதற்கு இணங்கி இருந்த அவர் திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். இது எம்மை ஏமாற்றிய நடவடிக்கையாகுமென கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் கடந்த 9ம் திகதி வரையப்பட்டபோது அரச தலைவரின் செயலகத்தில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா ஆகியோர் இருந்தனர் என்றும் தேர்தல் நாள் பற்றி கணக்கிடுவதற்காக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவும் அழைக்கப்பட்டிருந்தார் என்றும் சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

நாடாளுமன்றக் கலைப்பு சதிக்குப் பின்னால் இந்த மூவரும் இருந்தனர் என்ற குற்றச்சாட்டு வெளியானதை அடுத்து பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த 9ம் திகதி இரவு நான் அரச தலைவர் செயலகத்திற்கு சென்றது உண்மை. அங்கு மகிந்த தேசப்பிரிய இருந்ததைக் கண்டேன். எனினும் முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா இருக்கவில்லை. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை அன்று நான் சந்தித்த போதும் நாடாளுமன்றக் கலைப்புக் குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு இணக்கப்பாட்டைஏற்படுத்துவதற்கு நானும் பனே தம்மலங்கார தேரரும் தயாராக இருப்பதாக அரச தலைவரிடம் கூறினோம். அதற்கு இணங்கி இருந்த அவர் திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டார். இது எம்மை ஏமாற்றிய நடவடிக்கை ஆகும் என பேராயர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புனித மடுத்தீனார்....**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்து வரும் நிலையில் "அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு" என்பதற்கு அமைவாக அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுவோம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# திருவழிபாட்டு ஒழுங்குகளை ஒரே மாதிரிப் பின்பற்ற வாய்ப்பளியுங்கள்

## திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர்.

இளவாலை மறைக் கோட்டத்திற்கு உட்பட்ட பங்குகளை உள்ளடக்கிய திருவழிபாட்டுக்குழு, பாடகர் குழு, திருப்பண்டக்காப்பாளர் போன்றவற்றின் பிரதிநிதிகளுக்கான கருத்தமர்வு அண்மையில் தியான இல்லத்தில் நடைபெற்ற போது யாழ் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி X. ஜேம்ஸ் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எம் மறைமாவட்டத்தில் உள்ள சகல ஆலயங்களிலும் இடம்பெறும் திருவழிபாடுகள், குறிப்பாகத் திருப்பலிக் கொண்டாட்டங்களுக்கான ஒழுங்கு விதிகளை அனைவரும் கூடியவகையில் ஒரே அமைப்பில் பின்பற்றுவது சிறப்பானதும், திருவழிபாட்டு ஒழுங்கு விதிகளுக்கு அமைவானதாகவும் விளங்க வேண்டும்.

திருப்பலிவேளைகளில் வருகைப்பவனி, காணிக்கைப் பவனி, நற்கருணைப் பவனி என்பன பின்பற்றப்படுதல் அவசியமானது. அத்துடன் திருப்பாடல்கள் அன்றைய தினத்திற்குரியவற்றையே பாடுதல் வேண்டும். உறுதிப்பூசுதல் அருட்சாதனம் பெற்றவர்களே திருப்பலி வேளையில் வாசகங்கள், மன்றாட்டு, முன்னுரை என்பவற்றில் தகுந்த ஆயத்தத்துடன் பங்கு பற்ற வேண்டும். மக்கள் அனைவரும் பங்கேற்கக்கூடிய பாடல்களைப்பாடுவதும் புதிய பாடல்களாயின் திருவழிபாட்டு ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்று, மக்களுக்கும் பயிற்றுவித்து பின்னர் பாடுவது சிறப்பானது.

திருவழிபாடுகள் இறைவனோடு ஆழமான உறவையும் பக்திமிகு சூழலையும் உருவாக்கி பங்குபற்றுவோர் உள்ளங்களை இறைவனோடு ஒன்றினையச் செய்யும் வகையில் வழிநடத்திச் செல்வதைக் குறிக்கோளாகக்கொள்ள வேண்டும் எனவும் அடிகளார் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கருத்தமர்வானது இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி M. யேசுரட்ணம் அடிளாரின் ஒழுங்கமைப்பில் 60 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகளின் பங்கேற்பில் சிறப்புற இடம் பெற்றது.

# அகில இலங்கை சமாதான நீதிவானாகத் தெரிவு



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும், யாழ் புனித மரியன்னை பேராலயப் பங்குத் திருச்சபையைச் சேர்ந்தவருமான திரு இராயப்பு அலெக்ஸ் அமலரட்ணம் அவர்கள் 21.11.2018 அன்று யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி உயர்திரு அன்னலிங்கம் பிறேம்சங்கர் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கடந்த பதினைந்து வருடங்களாக யாழ் மாவட்ட சமாதான நீதிவானாக மக்களுக்கு அருட்பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது சமய மற்றும் சமூகப்பணிகள் சிறப்புற பாதுகாவலன் வாழ்த்தி மகிழ்கின்றது.

**வாசக நெஞ்சங்களுக்கு...**

கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்கு தங்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. 10.12.2018 இற்கு முன்பதாக கிடைக்கப்பெறும் தங்களது ஆக்கங்கள் தரம்கண்டு பிரசுரிக்கப்படும். - ஆசிரியர்


**மலிவு விலையில்**

- அழகான பாலன் பிறப்பு சொரூபங்கள்
- நத்தார் மரம்
- நத்தார் அலங்காரப் பொருட்கள்
- நத்தார் வாழ்த்துமடல்கள்
- நத்தார் பப்பா உடைகள்
- நத்தார் கால மெழுகுவர்த்திகள்
- விவிலிய நாட்குறிப்பேடு – 2019

மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**புனித வளன் கத்தோலிக்க அச்சகம்**
**360, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 2378**


# யாழ் மறைமாவட்ட குருக்களுக்கான ஞானொடுக்கம்



யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருக்களுக்கான முதலாம்கட்ட வருடாந்த தியானம் இம்மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை பண்டத்தரிப்பில் அமைந்துள்ள தியான இல்லத்தில் நடைபெற்றது. இத்தியானத்தை இந்தியாவிலிருந்து வருகை தந்த சலேசியன் துறவற சபையை சேர்ந்த அருட்திரு தி. ஜேம்ஸ் அடிகளார் நெறிப்படுத்தினார்.

இத்தியானத்தில் முதற்குழுவைச் சேர்ந்த 53 மறைமாவட்டக் குருக்கள் கலந்துகொண்டனர். இரண்டாம் குழுவினருக்கான தியானம் இவ்வாரம் நடைபெறுகின்றது.

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.